இழந்து போனேன். என்னையே நான் இழப்பது அபூர்வம். பெரும்பாலும் நேர்வதில்லை. எனக்கு நேர்ந்ததை மறைப்பது இல்லை.

எவன் தைரியசாலியே அவன்தான் தனக்கு நேர்ந்ததை எல்லாம் வெளியே சொல்லுவான். தெரிந்தது தெரியாததை எல்லாம் என்று மட்டுமல்ல தனக்கு நேர்ந்ததை அவமானத்தை - பிறர் கொடுத்த கஷ்டத்தை எல்லாம் சொல்லுவான். நான் அந்த மாதிரியான ஆள்.

அப்படி சொல்வதைத்தான் சுயசரிதை என்கிறார்கள். ஒவ்வொரு ஆளுக்கு சுயசரிதை உள்ளது. அதுமாதிரி ஒவ்வொரு மனுஷிக்கும் சுயசரிதை இருக்கிறது. சுயசரிதை என்பது சுயதம்பட்டம் இல்லை. தன்னைத்தானே பெருமைப்படுத்திக்கொள்வது இல்லை. நெஞ்சுக்கு நீதியென்று அநீதியை எழுதுவது இல்லை. எது நடந்ததோ அதை அப்படியே எழுதுவது. புத்தர் சீடர்கள் இவ்வாறு நடந்தது என்று தன் கண்ணால் பார்த்ததையும், காதால் கேட்டதையும் எழுதிவைத்து இருக்கிறார்கள்.

நான் சுயசரிதை விரும்பி படிக்கிற ஆள். அதுதான் உண்மையான கதை. பொய்யின் வழியாக உண்மை தெரிந்துவிடும். எத்தனைத்தான் சாதூரியம் இருந்தாலும், மெய்யை பொய்யாக்க முடியாது; அதுபோல பொய்யை மெய்யாக்க முடியாது.

எந்த சுயசரிதையும் மெய்யுமில்லை - என்பது போல பொய்யுமில்லை. அதுதான் சுயசரிதை மேல் என் விமர்சனம். என் விமர்சனம், யாருக்கும் தேவையில்லை. ஆனால் எனக்குத் தேவை. நான் எனக்காகவே படிக்கிறேன். படிப்பு புத்திசாலி ஆவதற்காகப் படிப்பதில்லை. நான் படிப்பை, படிப்பு என்பதற்காகவே படிக்கிறேன். அதனால்



நான் தொடர்ந்து படிப்பது இல்லை. எந்தப் புத்தகம், என்ன 'தியாகு படி' என்கிறதோ அதைத்தான் படிப்பேன். புத்தகம் என்னிடம் பேசும். நான் அதனோடு உரையாடுவேன்.

உலகத்திலேயே உயிர் உள்ளது என்றால் புத்தகந்தான். அது சாகாமல் ஜீவித்துக்கொண்டே இருக்கிறது. எத்தனையோ உயிர்கள் பிறந்து இறந்து, பிறந்து கொண்டு இருக்கின்றன. ஆனால் புத்தகம் மட்டும் ஜீவித்துக்கொண்டே இருக்கிறது.

நான் யோசித்து யோசித்து ஆச்சரியப்பட்டு போன தென்றால் அது புத்தகத்தின் ஜீவிதம் பற்றிதான்.

கடவுளும் புத்தகமும் ஒன்று. கடவுள்தான் புத்தகங்களில் இருக்கிறார். நான் கடவுளை ஸ்தாபிக்க சொல்லவில்லை. கடவுளை மனிதன் ஸ்தாபிக்க முடியாது. ஏனெனில் அவர் தன்னைத்தானே ஸ்தாபித்துக்கொண்டு இருக்கிறார். உதிக்கும் சூரியனும்; மறையும் சந்திரனும், அலைபொங்கும் கடலும், வீசுங்காற்றும், பொழியும் மழையும் கடவுள். அதில் என் நம்பிக்கை அப்படி யொன்றும் முக்கியம் இல்லை. ஆனால் கடவுள் இருக்கிறார் என்பதை நான் புத்தகத்தின் வழியாகக் கண்டு கொண்டேன். இதை கொஞ்சம் மாற்றிப்போட்டால், கடவுள் எனக்கு புத்தகத்தின் வழியாகப் புரியவைத்தார்.

மனிதன் எத்தனையோ மர்மங்களை - புதிர்களைத் தன்னுடைய அறிவால், ஞானத்தால் புரிந்துகொண்டு இருக்கிறான். தன்னுடைய புரிதலை எல்லோரும் அறிந்து கொள்ள எழுதிவைத்திருக்கிறான். புரிந்து கொண்ட திலேயே மகத்தான புரிதல் அவன் எழுத்து என்ற ஒன்றை கண்டுபிடித்ததுதான். அது மட்டுந்தான் புரிந்தது.

"தியாகு, கொஞ்சம் சொல்லு" என்றேன்.

எனக்குக் குழப்பும், தவிப்பு, புரியாதது மாதிரி இருந்தால் தியாகராஜனை நினைக்குக் கூப்பிட்டு விடுவேன். அவன் தான் எனக்கு பேராசிரியர். ஞானகுரு நிஜத்தில் குருவை சீடன்தான் ஸ்தாபிக்கிறான் என்று நான் படித்து இருக்கிறேன். அது நிஜமாகக்கூட இருக்கலாம். ஆனால் என் குரு தியாகராஜ முதலியார் தான். அவர் ஒரு ஆளோ; ஒரு புத்தகமோ இல்லை. எனக்கு அவர்தான் எல்லாம். அவர் ஞானத்தின் சுடர். எரியும் நெருப்பு. அவரும் நானும் நடத்தும் உரையாடல் விரோதமாக இருக்கும். நான் விரோதம் என்கிறேன். பாரிஜாதம் பயங்கரம் என்று சொல்லி மயங்கி விழுந்துவிட்டான்.

பழக்கம் இல்லாதது, தெரியாதது எல்லாம் புதிரான வாழ்க்கையின் சுவாரசியம் புதிர்தான். எதுவும் எப்போதும் புரிவதில்லை. புரிந்தது என்று நினைத்துக்கொண்டிருப்பது எல்லாம் புரிந்ததில்லை. நினைப்பும் நிறமும் ஒன்றில்லை ஒன்றுபோல் இருந்தாலும் வேறுபட்டு இருப்பது. ஒன்றுபட்டு இருப்பதைத் தெரிந்துகொள்வது மாதிரி வேறுபட்டு இருப்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

உண்மையில், எவர்க்கும் எதையும் தெரிந்து கொள்ளும் ஆர்வம் கிடையாது. ஏனெனில் அது உழைப்பு வேலை. இன்றும் இன்றுமென்று சலிப்பே இல்லாமல் வேலை செய்வது. நான் வேலை என்கிறேன். தெரிந்தசொல்லை வைத்துக்கொண்டு தெரியாததை விளக்குவதுதான். இப்படிச் சொல்லலாம். அரூபத்தில் இருந்து ரூபத்தை காண்பது. ஒன்றை கண்ணால்தான் காண முடியும் என்றாலும் கண் பிரதானமில்லை. கண் புறதோற்றத்தைத்தான் கண்டு கொள்ளும். நான் கண்ணை மட்டும் நம்பு ஆசாமி இல்லை. கண்ணின் வழியாகக் கண்ணை புறந்தள்ளுகிறான்.



நான் கண் இல்லாமல் எதையும் பார்ப்பேன்; கால் இல்லாமல் நடப்பேன். இறக்கை இல்லாமல் பறப்பேன். பேச்சு இல்லாமல் பேசுவேன். செவியில்லாமல் கேட்பேன். மனச்சிதைவு ஏற்பட்டு பைத்தியமாகி விட்டேன் என்று சொல்லத்தோன்றும். அப்படிச் சொல்கிறவர்கள் மீது எனக்குக் கோபம் வெறுப்பு கிடையாது. அது அவர்களின் அறிவு. தெரிந்தது. யார்க்கு என்ன தெரியுமோ அதைத்தான் பேச முடியும்.

நான் தெரிந்ததில் இருந்து தெரியாததைப் பேசுகிறேன். தெரியாததைப் பற்றி எப்படி பேசமுடியுமென்றால், அப்படி கேட்கிற ஆள் மீது எனக்கு பரிதாபந்தான் ஏற்படும்.

"ஐயோ, பாவம் தியாகு" என்று பிரச்சினையை தியாகராஜ முதலியாரிடம் கொண்டுபோய்விடுவேன். உலகத்திலேயே நான் நம்புகிற ஆள் அவர்தான். ஏனெனில் நானும் அவரும் வேறு இல்லை. ஒன்றுதான் என்றாலும், ஒரே மாதிரி யோசிக்க மாட்டோம். எதுவும் ஒன்றில்லை. ஒன்றுக்குள் ஒருநூறு இருக்கிறது என்பது தான் அதன் தத்துவம். எப்பொழுத எதுவேண்டுமோ அப்பொழுது அதை எடுத்துக்கொள்ள வேண்டும். அதுதான் திறமை. என் வழிகாட்டியான தியாகராஜ முதலியார் திறமை. திறமை என்பதை அறிந்துகொள்ள ஒரு திறமை வேண்டும் என்று ஒருநாள் என் மேலக்காரி அரங்க மாணிக்கத்திடம் சொன்னேன்.

"எனக்குத் திறமை இல்லையா?" என்று வெடுக்கென்று கேட்டார்.

நான் அவரை ஏறெட்டுப் பார்த்தேன். உண்டு, இல்லை என்பதால் எதுவும் இருப்பதும் இல்லை, இல்லாமல் போவதும் இல்லை.

"சார், என்னமோ கேட்கிறாரே தியாகு" என்று கேட்டேன்.

"பாவம் நீ என்ன செய்வ" என்றார் தியாகராஜ முதலியார்.

நான் பதில் சொல்லாமல் வெளியில் வந்தேன். சொல்வதைவிட சொல்லாமல் இருப்பது தான் நல்லது. அதுதான் பதில். அது அரங்க மாணிக்கத்தை கொதிப்படைய வைத்துவிட்டது. எனக்கு அது தெரியும். முட்டாள்களுக்கு உண்மை பிடிபடுவதே இல்லை. அதுவும் அதிகாரியாகிவிட்டால் சொல்லவே வேண்டாம். நான் சொல்ல வேண்டாம் என்று இருப்பதை ஜவகர்லால் நேரு சொல்லி இருக்கிறார். அவர்க்கு ராணுவ அதிகாரி; போலீஸ் அதிகாரி மேலெல்லாம் வெறுப்பு கோபம் கிடையாது. அவர் பெரிய அறிவாளி. அவர் காலத்தில் அவர்தான் ஒரே ஒரு ஜனநாயகவாதி அவர் சொன்னதை நான் திருப்பிச் சொல்ல மாட்டேன். யார்க்கும் எது தேவையோ அதை அவர்தான் தேடி அடையவேண்டும். அப்பொழுதுதான் அதன் அருமை, பெருமை தெரியும். சிறப்பு பிடிபடும். அப்படி இல்லாமல் போவதால் தான் இலவசம் நிந்திக்கப்படுகிறது. தானாக கிடைக்கும் எதுவும் பெருமை அடைவதில்லை.

நான் தலைக்காவிரிக்குத் தன்னந்தனியாகப் றப்பட்டேன். ஞானசம்பந்தம் என்னிடம் நடந்தாய் வாழி ாவிரி என்று புத்தகத்தைக் கொடுத்தார். வாங்கிக் கொண்டு ரட்டிப் பார்த்தேன்.

"காவிரி வழிநெடுகப் பயணம் செய்து எழுதி ருக்கிறார்கள். தலைக்காவிரியில் இருந்து காவிரிப் டினம் வரையில் பயணம். நம்பகூட அப்படித்தான் ணப்படனுமென்று இருந்தேன்."



நான் ஆறு, ஏரி, கடல் எல்லாம் பார்த்து இருக்கிறேன். அத்தையோடு காட்டு மன்னார்குடி சென்று பராந்தக சோழன் பெட்டிய வீர நாராயணன் ஏரியைப் பார்த்தேன். பெரிய ஏரி, கடலென பரந்து விரிந்து கிடந்தது.

"கல்கி இந்த ஏரியைப் பற்றித்தான் எழுதி இருக்கிறார். வந்தியத்தேவன் குதிரைமீது ஏரிக்கரையில் போகிறான்" என்று அத்தை அம்மாவிடம் சொன்னதைக் கேட்டு இருக்கிறேன்.

அம்மா படிப்பு ஒரு தினுசு என்றால் அத்தை படிப்பு இன்று தினுசு. அம்மா பூசையறையில் காமாட்சி விளக்கேற்றி வைத்துவிட்டு தலையில் பூவும், நெற்றியில் செந்தூரமும் வைத்துக்கொண்டு கழுத்தைச் சுற்றி புடவைத் தலைப்பை போட்டுக்கொண்டு கந்த சஷ்டி படிக்கும். குரல் தனியாக ஒலிக்கும். அக்கறை கொள்ள, வேலையை நிறுத்திவிட்டு கேட்க தூண்டும். நான் அம்மா கந்த சஷ்டி படிக்கும்போது எதிரே வந்து உட்கார்ந்து இருக்கிறேன். அது ஓர் அற்புதமான அனுபவம். எத்தனையோ ஆண்டுகள் போய்விட்டன. என் இளம் பருவம் ஒழிந்துவிட்து; அம்மா செத்துவிட்டது. அம்மா கந்த சஷ்டி படிக்க நான் எதிரே அமர்ந்துகேட்ட வீடு விற்கப்பட்டுவிட்டது. இடித்துவிட்டு பிளாட் கட்டப்பட்டு இருப்பதாகக் கேள்வி. அதில் எனக்கு வருத்தமோ கோபமோ கிடையாது. பழையது போகும்; அடியோடு ஒழிந்து போகும். புதியது வரும். அதுதான் உயிர்த்தன்மை. பழையது என்பதற்காக எதையும் காத்துக் கொண்டிருக்க முடியாது. முடிவே இல்லாத வாழ்க்கையில் ஏராளமானவை முடிந்துபோய்விடுகின்றன. முடிவு நல்லது. ஒழிவது சிறப்பானது.

எதுவும் தனியானது இல்லை. ஒன்றோடு ஒன்று சேர்ந்திருப்பது. நான் தலைக்காவிரியைச் சுற்றிவந்தேன்.

எத்தனையோ ஆண்டுகளாக மனத்தில் பொங்கிப்பூத்த ஆசை காவிரியைக் கடலோடு சங்கமிப்பதை கண்ட கண்கள் காவிரியின் தொடக்கத்தை காணும் பாக்கியம் பெற்றுவிட்டன.

எல்லாம் எல்லோர்க்கும் சாத்தியமில்லை. விரும்புவது ஆசைப்படுவது எல்லாம் நடப்பதில்லை. என்னோடு தலைக்காவிரிக்கு வர சம்பந்தம் ஆசை பட்டான். அவனுக்குச் சாத்தியப்படவில்லை. ஆனால் எனக்குச் சாத்தியப்பட்டு இருக்கிறது. ஒருவனுக்கு முடியாதது இன்னொருவனுக்கு முடியும். அதில் சொல்ல வேண்டியது முடிவதும் முடியாததுந்தான். எனக்கு எல்லாம் முடிகிறது. நான் எதை அடைய ஆசைப் படுகின்றேனோ அது நடக்கிறது. அது ஏன்? எதற்கு?

தலைக்காவிரியில், பிரகிரி மலையில் ஏறி நின்று சுற்றும் முற்றும் பார்த்தபடி, "தியாகு, உனக்கு மட்டும் ஏன் எல்லாம் நடக்கிறது?" என்று வினவினேன்.

"உனக்குத் தெரியல"

"எனக்குத் தெரியறது; அது இருக்கட்டும் நீ சொல்லு."

"நீ எதற்கும் ஆசைப்படுறது இல்ல. அதனால நடக்கிறது."

எனக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. நான், என்னைப் பற்றி நினைத்துக்கொண்டு இருப்பது சரியில்லை என்பது தியாகராஜ முதலியார் சொல்லத்தான் தெரிந்தது.

"அப்படியா?"



"இப்படியும் சொல்லலாம்"

நான் தலையை அசைத்துக்கொண்டு மலையில் இருந்து கீழே இறங்கி வந்தேன்.

ஒரு கூர்க் குடும்பம் பக்தி சிரத்தையோடு காவிரித் தாயை வணங்கிக் கொண்டிருந்தது.

தண்ணீரும் காவிரியே என்று மனத்திற்குள் சொல்லிக்கொண்டு காவிரியைத்தொழுதேன். ஆறு தொடங்கும் ஊற்றே கோவிலாக இருந்தது. சிமிண்டில் படிகள்கள் கட்டி சீர்படுத்தி இருந்தார்கள். 900 கிலோமீட்டர் ஓடிவந்து கடலோடு கலக்கும் காவிரியின் சரித்திரத்தை நினைத்துக்கொண்டேன். உண்மையில், எழுதப்பட வேண்டியது ஆற்றின் சரித்திரந்தான். ஆறுதான் மனித வாழ்க்கைக்கு ஆதாரம். நீரின்றி அமையாது உலகு.

நான் இரண்டு முறை காவிரி ஊற்றைச் சுற்றி வந்தேன். தண்ணீர் கொப்பளிக்கிறதா என்று பார்த்தேன். நீர் மட்டம் உயர்கிறதா என்று கவனித்தேன். ஒன்றும் தெரியவில்லை. மாறுதல் எதுவும் கண்களுக்குப் புலனாகவில்லை. மார்பின் குறுக்காக சேலையைப் போட்டுக்கொண்டு கூர்க் பெண்கள் இரண்டுபேர் என்னைக் கடந்து சென்றார்கள். சிவப்பாக உயரமாக இருந்தார்கள். அவர்கள் அந்தப் பக்கத்துப் பெண் என்றாலும் பூர்வீகம் கிரேக்கம். எத்தனையோ நூற்றாண்டிற்கு முன்னால் கிரேக்கத்தில் இருந்து புலம் பெயர்ந்துவந்த யவனர்கள் யவனச்சிகளின் வழித் தோன்றல்கள். நூற்றாண்டுகளில், எத்தனையோ மாறுதல் ஏற்பட்டுவிட்டது; மொழியை கைவிட்டு விட்டார்கள்; உடையைக் களைந்து தூக்கிப்போட்டு விட்டார்கள். அடையாளம் மாறிபோய்விட்டது. தாயகத்தோடு

தொடர்பே கிடையாது; யவனம் எங்கே இருக்கிறது என்பு இவர்களுக்குத் தெரியாததுபோல கூர்க் எங்குள்ளது என்பு கிரேக்கர்களுக்குத் தெரியாது. தெரியாது என்பதால் இல்லையென்று சொல்ல முடியாது. அதற்குச் சாட்சியாகத்தான் இருக்கிறார்கள்.

சூரியன் மறைந்து இருள் கவிழ்கிற வரையில் நான் தலைக்காவிரியிலேயே சுற்றிக்கொண்டு இருந்தேன். சுற்றச் சுற்ற என்னுள் ஆவேசம் பொங்கியது. ஒன்றுமே இல்லாததுபோல இருந்த மலைப்பிரதேசம் வனமாகியது. வனத்தில் மழை பொழிய ஆரம்பித்தது. மழையென்றால் அப்படியொரு மழை. வானத்திற்கும் பூமிக்குமாக நூல் பிடித்தது மாதிரி பொழிந்துகொண்டு இருந்தது. பூமியில் விழுந்த மழைநீர் பள்ளம்நோக்கி ஓடி நிறைந்து வழிந்து இருகரைகளுக்கு இடையில் ஓடியது. மறுபடியும் மறுபடியும் ஒரே தடத்தில் ஓடியதால் ஆறென பெயர் பெற்றது.

ஒவ்வொரு இடத்திலும் ஆறு தனித்தனியாக இருக்கிறது. ஆனால் எல்லா ஆறும் தாய்தான். பெண்தான். பெண்ணின்றி உலகம் இல்லை என்பதைத்தான் ஆறுகள் சொல்கின்றன. ஒவ்வொருவரும் தாய்தான். பெண்தான். பெண்ணின்றி உலகம் இல்லை என்பதைத்தான் ஆறுகள் சொல்கின்றன. ஒவ்வொருவரும் பேசிக்கொண்டது மாதிரி ஆறுகளுக்குப் பெண்ணின் பெயரே வைத்து இருக்கிறார்கள். அது ஆச்சரியம் இல்லை. எல்லோரும் ஒன்று. இடத்தால் யாரும் வித்தியாசப்படுவதில்லை. மனிதனை மூளையால்தான் அறியப்படவேண்டும். நிறத்தால், மொழியால் வசிக்கும் இடத்தால் பின்னப் படுத்தி பார்க்கக்கூடாது. நீயும் நானும் ஒன்றில்லை என்றாலும் வித்தியாசம் இல்லை. அதுதான் அடிப்படை அதற்கு மேலும் ஒன்றுமில்லை; ஒன்றும் கிடையாது.



ஒரே மனிதன் எல்லாவிடத்திலும் எல்லா காலத்திலும் ஜீவித்துக்கொண்டிருக்கிறான் என்று தியாகராஜ முதலியார் ஒருநாள் என்னிடம் சொன்னார். நான் அதை கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன். எனக்கு எப்பொழுது என்ன சொல்லவேண்டும் என்பது தெரியும். தெரிந்ததைத் தெளிவாகச் சொல்லிவிடுவேன். அதில் பிடித்தமானது பிடிக்காதது என்பது எல்லாம் கிடையாது. அதாவது பிடித்ததை மேம்படுத்தியும், பிடிக்காததை கீழே இறக்கியும் சொல்லமாட்டேன். எனக்கு இரண்டும் ஒன்றுதான். எது இருக்கிறதோ அதுதான் முக்கியம். எதன் மீதும் பற்றும் பாசமும் இல்லாதவன். இப்படிச் சொல்வது என்ன மேலே உயர்த்திக்கொள்ள சொல்வது மாதிரி தோன்றும். எனக்கு அப்படிப்பட்ட எண்ணமெல்லாம் கிடையாது. எதில் இருந்து, என்ன கிடைக்கிறதோ அதுதான் பேச வைக்கிறது.

தென்றல்,

புயல்,

சூறாவளி - எல்லாம் காற்றுதான என்றாலும் ஒரே காற்று இல்லை.

நான் சொல்வதை அரூபமாக வைத்துக் கொண்டுதான் புரிந்துகொள்ளவேண்டும். ஆனால் தவறாகப் புரிந்துகொண்டால், அதற்காக நான் கோபித்துக் கொண்டு, சண்டை போடமாட்டேன். புனைப்பெயரில் புத்தகம் போட்டு அவதூறு செய்யமாட்டேன்.

"அவ்வளவுதான். சரி" எனறு அடுத்தவேலைக்குப் போய்விடுவேன்.

அது பொறுமையின் வெளிப்பாடு இல்லை.

உதாசீனத்தின் வெளிப்பாடு. எது பிடிக்கவில்லையோ, எததோடு உடன்பாடு இல்லையோ அதை விட்டுவிட்டு விலகி போய்விட வேண்டும். அதில் தியாகராஜ முதலியார் சொல்லிக்கொடுத்தது கொஞ்சம்; நானாகத் தெரிந்து கொண்டது அதிகம்.

நான்கு நாட்கள் பாகமண்டலத்தில் இருந்தேன். தலைக்காவிரிக்கு ஊரென்றால் அதுதான். சின்ன ஊர். பத்துப் பன்னிரண்டு வீடுகள். இரண்டு டீ கடை. டீ குடித்துவிட்டு நடந்தேன். தரிவேணி சங்கமம். மூன்று ஆறுகள் கூடும் இடமெல்லாம் திரிவேணி சங்கமந்தான். காலம் காலமாக மக்கள் கொண்டாடி வருகிறார்கள். மழை காலம் ஆனபடியால் திரிவேணி சங்கமத்தில் தண்ணீர் கரை புரண்டு ஓடிகொண்டிருந்தது. நான் கொஞ்ச நேரம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

மனசு நீரோடு சென்றது. காவிரிக் கரையில் இருந்து நான் குதித்ததெல்லாம் நினைவிற்கு வந்தது. நான் காவிரியில் தான் நீச்சல் கற்றுக்கொண்டேன். எதன் மீது ஈடுபாடு இருக்கிறதோ அது சுலபமாக வந்துவிடும். நான் இரண்டு நாளில் நீச்சல் கற்றுக்கொண்டு விட்டேன். நீச்சல் என்றுதான் இல்லை. நான் ஆசைப்பட்டதை எல்லாம் விரைவிலேயே கற்றுக்கொண்டு விடுவேன். எனக்கொன்று வரவில்லையென்றால் அதில் மனசு பதியவில்லை என்று பெயர். மனசு அமைதியிழந்துவிடும். அதுதான் விருப்பமின்மை என்பதின் வெளிப்பாடு. தானாகக் கனியாததைத் தடிகொண்டு அடிக்கக்கூடாது. நானாகத்தான் அதையும் தெரிந்துகொண்டேன்.

எனக்கு நாற்பத்தெழு வயதாகிவிட்டது. மூன்று ஃவேலை பார்த்துவிட்டேன். எனக்கு வேலை கிடைப்பது சுலபமாக இருந்தது. இங்கிலிஷ் நன்றாகப் பேசுவேன்.



அதைவிட நன்றாக எழுதுவேன். எந்த இடத்தில் எந்த வார்த்தையைப் போடவேண்டும் என்பது எனக்குத் தெரியும். அது ரங்காச்சாரியால் வந்தது. அவர்தான் எனக்கு டிஸ்னரி வாங்கிவந்து கொடுத்தார். நான் அதை வாங்கிக் கொண்டு அவரை ஏறெட்டுப் பார்த்தேன். கொடுப்பதில் அவர்க்குச் சந்தோஷம்; வாங்கிக்கொள்வதில் எனக்கு ஆனந்தம்.

"டிஸ்னரி படி. நீ ரொம்ப மேல வந்துடுவ" என்றார். நான் எப்படியும் மேலே வந்துவிடுவேன் என்பது அவர்க்கு அப்பொழுதே தெரிந்து இருந்தது.

அம்மா, அப்பாவைவிட ஆசிரியர் தான் பெரியவர். ஏனெனில் அவர்தான் பாடம் கற்றுக்கொடுக்கிறார் என்பது மட்டுமல்ல சொந்த லாபம் நஷ்டம் பற்றி யோசிக்காமல் ஆளை எடைபோட்டு விடுகிறார்.

நான் ரங்காச்சரியாரை அடிக்கடி நினைவுப்படுத்திக் கொள்கிறேன். அவர் என்னைக் கண்டு பிடித்ததற்காக இல்லை; நான் அவரை அறிந்துகொண்டதற்காக. யாரை அறிந்துகொள்ள வேண்டுமோ அவரை ஏழெட்டு வயசிலேயே அறிந்து கொண்டேன்.

அறிவு என்பது வயது பற்றியது இல்லை. சின்ன வயது பெரிய வயது என்ற பாகுபாடெல்லாம் கிடையாது. மனிதனின் மூளை மூன்று வயதிற்குள் பூரண வளர்ச்சி பெற்றுவிடுகிறது. அதைச் சிலர் நான்கு ஐந்து வயதிற்குள் பயன்படுத்த ஆரம்பித்துவிடுகிறார்கள். வேறுசிலர் ஐம்பது ஐம்பத்தைந்து வயதில்கூட பயன்படுத்தாமல் விட்டு விடுகிறார்கள்.

மூளை பயன்படுத்தவேண்டிய பொருள். தொட்டனத்தூறும் மணற்கேணி. பயன்படுத்தப்

பயன்படுத்த செம்மையுறும். அடிக்கடி தன்னைப்
புதுப்பித்துக்கொள்ளும்; பயன்படுத்தாவிட்டால்
துருபிடித்து மக்கி போய்விடும். ரொம்ப பேர்களுக்கு
மூளையை பயன்படுத்தாமல் துருபிடிக்கவைக்கத்தான்
தெரியும். நான் அப்படி இல்லை. உடலால் உழைக்கிறவன்
மாதிரி மூளையாலும் உழைப்பேன். உழைப்புதான் என்
பலம். இரவு பகல் என்றவேறுபாடெல்லாம் எனக்குக்
கிடையாது. என் மூளை எப்போதும் விழித்துக்கொண்டே
இருக்கும்.

நெருப்பு என்றால் எரியவேண்டும்; பாம்பு என்றால்
சீறவேண்டும். அது எதுவோ, அதுவாக இருக்கவேண்டும்.
ஒன்று இன்னொன்றாக வேடம் புனையகூடாது.
வேடத்திற்கு நாடகக் கொட்டகையில், சினிமாவில்தான்
இடம் உண்டு. பொதுஇடத்தில் சிநேகிதர்கள் இடையில்,
அலுவலகத்தில் - எங்கேயும் வேடதாரிக்கு இடம்
கிடையாது. அதை அறிவுதான் சொல்லிக்கொடுக்கும்.
அறிவு சொல்வதை பலர் கேட்பதில்லை. அதற்கு அறிவு
பொறுப்பு இல்லை.

நான் சின்ன வயதில் ஒரு கதைக் கேட்டேன். அத்தை
சொன்ன கதை. அத்தை எது சொன்னாலும் மனத்தில்
தைய்கிறமாதிரி சொல்லும். மனசை அங்கே இங்கே
அலையவிடாதவாறு அத்தைச் சொல்வதைக் கேட்டுக்
கொண்டேன் இருப்பேன். அத்தை என்னை மட்டுமல்ல.
கூட இருக்கிற எல்லோரையும் கேட்கவைத்துவிடும்.
அதுதான் அத்தையின் சாமார்த்தியம். அத்தை ரொம்ப
வித்தியாசமானது. என் அத்தை என்பதற்காகச் சொல்ல
வில்லை. நான் யாரையும் அனாவசியமாகத் தூற்ற
மாட்டேன். ஒருவார்த்தைக்கூடதவறாகப் பேசமாட்டேன்.
என்னைப் பொறுத்தவரையில் பெண் தெய்வம்.



தெய்வத்தின் முன்னே அறிவு, அகம்பாவம் திறமை,
பெயர், புகழ், வீரதீரம் எதுவுமே செல்லுபடி ஆகாது.
என்னை வைத்துக்கொண்டு சொல்லவில்லை. எதற்கும்
நான் எடுத்துக்காட்டு கிடையாது. நல்லது, பொல்லாதது
எதுவும் எனக்குக் கிடையாது.

நான், நானே. எப்பொழுதும் நானாகவே இருந்து
அறிந்துகொள்கிறேன். அது அகம்பாவம் என்றால் மறுக்க
மாட்டேன். வாழ்க்கை மறுப்பது இல்லை. வாழ்வது.
என்ன கிடைத்து இருக்கிறதோ அந்த வாழ்க்கையை
நிறைவாக குறையொன்றும் இல்லாமல் வாழ்வது.

அதற்கு அத்தைதான் சாட்சி. எனக்கு நினைவு
தெரிந்த நாட்களாக அத்தை எங்கள் வீட்டில்தான்
இருக்கிறது. அத்தை கணவரை-மாமாவை நான் பார்த்தது
இல்லை. மாமா பற்றி ஒருவரும் பேசுவதில்லை. ஒரு
விஷயம் பேசுவதில்லை என்பதால் இல்லாமல்
போவதில்லை. ஏனெனில் அது பேச்சு சார்ந்தது இல்லை.
பேசினாலும் இருப்பது போல, பேசாவிட்டாலும்
இருக்கிறது. இருப்பதைத் தெரிந்துகொள்வதும் தெரிந்து
கொள்ளாமல் இருப்பது அவரவர் விருப்பம்.

நான் எல்லாவற்றையும் தெரிந்துகொள்கிற ஆள்.
எல்லாம் முக்கியம் என்பது மாதிரி எதுவும் முக்கியமல்ல.
ஆனால் தெரிந்துகொள்ளவேண்டும். தெரிந்து கொள்வ
தென்பது முக்கியம், முக்கியமில்லை என்பதைச் சார்ந்த
தில்லை. எதுவும் எதையும் சார்ந்ததில்லை. ஆனால்
ஒவ்வொன்றும் இன்னொன்றைச் சார்ந்தது போல
இருக்கும். ஆனால் சார்ந்து இருப்பதில்லை. மகள்
அம்மாவைச் சார்ந்து இருப்பதில்லை. தகப்பன் மகனைச்
சார்ந்து வாழ்வதில்லை. கணவன் மனைவியும்
அப்படித்தான். எதுவும் எதையும் சார்ந்து இருப்பதில்லை.

பிறப்புக்கு அம்மாவும் அப்பாவும் காரணம் என்றாலும் மகள் அப்பா இல்லை; மகள் அந்தக் குடும்பத்து பெண்ணில்லை. இன்னொரு குடும்பத்தில் வாழ்க்கைப்பட வளர்கிறவள்; இல்லாவிட்டால் வளர்க்கப் படுகிறவள். எனக்குப் பிறந்தாள், என்னால் வளர்க்கப் பட்டவள் என்பதற்காக மகள்மீது உரிமையெதும் கொண்டாட முடியாது. இன்னொரு வீட்டில் வாழ்க்கைப்பட என் வீட்டில் வளர்கிறாள். அவ்வளவுதான். அதற்கு மேல் சொந்தம், உரிமை கிடையாது. அன்பு, பாசம், உறவு என்பதெல்லாம் இல்லவே இல்லை. அவை கற்பனை. சிருஷ்டிக்கப்பட்டவை. அறிவால் படைக்கப் பட்டவை. எத்தனை எத்தனையோ கற்பனை முலாம் பூசப்பட்டவை. எந்த முலாமும் ரொம்ப நாட்களுக்கு இருப்பது இல்லை. இளித்துவிடுகிறது. சாயம் என்பது சாசுவதாக இருப்பது இல்லை. பூசியபோது பளபளவென்று இருப்பது பத்து நாட்கள் ஆனதும் போய்விடும். அது இயல்பு. அதை ஏற்கவேண்டும்.

ஏற்பது இயல்பு. அத்தை வாழ்க்கை ஏற்றுக்கொண்டு விட்டது. நான், பின்னால்தான் அதைத் தெரிந்து கொண்டேன். என் மதிப்பில் அத்தை கூடிவிட்டது. நான் ரொம்ப பணிந்துவிட்டேன். அறியாது பணிவது நல்லதுதான் என்றாலும் அறிந்து பணிவது அதலிலும் சிறப்பானது.

மாமா என்ன செய்தார்; அத்தை என்ன சொன்னது? அது முக்கியமில்லை. உண்மை என்பது விளக்கிச் சொல்வதில்லை. எதை எப்படி தெரிந்துகொள்ள வேண்டுமோ அப்படித் தெரிந்து கொள்ளவேண்டும். உண்மையென்பது விளக்கிச் சொல்லப்படுவதில்லை. நடப்பின் வழியாக அறிந்துகொள்வது. அது சாத்தியமா?



முடியுமா என்பதெல்லாம் கேள்வியே கிடையாது. மனசு இருந்தால் முடியும்?

எனக்கு முடிகிறது. அதுதான் முக்கியம். இன்னொருவர்க்கு முடியவில்லை என்பதால் எனக்கு இல்லை என்பதாகிவிடாது. என்னளவில் நான் தான் முக்கியம். இருப்பதும், இறப்பது நானே? என்பொருட்டு இன்னொருவர் இருக்கமுடியாது; அதே மாதிரி இன்னொருவர் இறக்க முடியாது. அதுதான் வாழ்க்கை. நீயே வாழ்ந்து நீயே சாகவேண்டும். சாவு மாதிரியே, வாழ்க்கையும் மேலானது. நான் நிஜமாகத்தான் சொல்கிறேன். எனக்கு வாழ்வதில் தான் பயம். ஏனெனில் வாழ்க்கையென்பது பயங்கரமானது. அதுபற்றி கற்பனை செய்ய முடியாது. இதுவரையில் சொல்லப்பட்டு இருப்பதையெல்லாம் அது புறம் தள்ளிவிடுகிறது.

வாழ்க்கையின் நிஜமான முகம் கோரமானது; பார்க்கவே சகிக்காதது. காட்டக்கூடாத தன்னுடைய பயங்கரமான முகத்தை ஒவ்வொரு ஆணும் மறைத்து வைத்துக்கொண்டு இருக்கிறான். அதில் பெரிய ஆள் சின்னஆள் என்பதெல்லாம் கிடையாது. அற்பர்த்தனத்தில் எல்லோரும் ஒன்றுதான். ஒன்றாக இருக்கறவரையில் வித்தியாசம் தெரிவதில்லை. கொஞ்சம் தனியாளாக வந்தால் கோரமான முகம் தனித்தனியாக தெரிந்து விடுகிறது.

அத்தை, மாமாவின் கோரமுகத்தைப் பார்த்து மிரண்டுபோய் வந்துவிட்டது. எங்கள் வீடு வந்தது. வந்ததுதான். அப்புறம் கணவன்வீடென்று காலெடுத்து வைக்கவில்லை. முப்பதொரு ஆண்டுகள் எங்கள் வீட்டில் வாழ்ந்தது. எங்களையெல்லாம் வளர்த்தது. நான் ஒரு ஆளாக இருக்கிறேன் என்றால், அதற்கு அத்தைதான்

காரணம். என்னிடம் உள்ள நல்ல குணத்திற்கு அத்தை என்றும் - கெட்ட குணத்திற்கு நானே காரணம். நான் அதை அறிந்து கொண்டு அறிந்து கொண்டவாறு சொல்கிறேன்.

அத்தை என்னையே எனக்கு தெரியவைத்தது. அதுதான் அத்தை. அத்தை செத்துப்போனபோது, நான் கல்கத்தாவில் இருந்தேன். ராமகிருஷ்ணா மடத்திற்குச் சென்று வழிபட்டேன். வாழ்க்கையின் விசித்திரம் அதுதான். அத்தையை எனக்குப் பிடிக்கும் என்பதுபோல - அத்தைக்கும் என்னைப் பிடிக்கும். அதைநான் அறிவேன். யாரிடமும் பாரபட்சம் அத்தைக் காட்டாது என்றாலும், என்னிடம் தனியாக அன்பு பாராட்டும். அதற்குக் காரணம் நான்தான். அத்தை என்ன சொன்னாலும் நான் செய்வேன்.

கல்கத்தாவின் நூற்றுக்கணக்கான விதவை பெண்களைப் பார்த்தேன். கணவனை இழந்த பெண்கள்; கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் - தறிகெட்டு நிர்க்கதியாக தெருவிற்கு வந்த பெண்கள் என நூற்றுக் கணக்கான பெண்களின் ஆசிரமத்தை வெளியில் இருந்து பார்த்தேன். அனந்தசங்கர் பானர்ஜியின் மனைவி அபர்ணாதேவி ஐம்பதாண்டுகளுக்கு முன்னால் ஏற்படுத்தியது என்று சொன்னார்கள். நான் வாசலில் நின்று கையெடுத்துக்கும்பிட்டேன். அனாதையான பெண் களுக்கு இன்னொரு பெண் அடைக்கலம் கொடுத்து இருக்கிறார். அது சேவைகளுக்கு மேலே பெரியசேவை. எந்த வார்த்தைக் கொண்டும் அதை சரியாகச் சொல்ல முடியாது. ஏனெனில் வார்த்தை சொல் என்பதெல்லாம் வெறும் கண்டுபிடிப்பு. கண்டுபிடிப்பு மூலமாக எதையும் சரியாகச் சொல்ல முடியாது. எதைச்சொல்ல முடியாதோ அதுதான் உண்மை.

பொய் சொல்லலாம்.



சொல்ல கூடியது.

நான் பொய்களை அறிவேன். உண்மை பேசுகிறேன்; மெய் பேசுகிறேன் என்கிற ஆளெல்லாம் பொய் பேசுகிற தான்

உண்மை என்பது பேச்சு இல்லை. அது பேச்சை கடந்தது. அதாவது சொல்லைத்தாண்டி எங்கும் நிறைந்து இருப்பது.

அத்தை செத்த பிறகு, ஒன்பது நாட்கள் கழித்து நான் வீட்டிற்கு வந்தேன். வீடு இருந்தது. எல்லா வீடும் சாவு விழுந்த வீடுதான். சாவு இல்லாத வீடே உலகத்தில் கிடையாது. அதனால்தான் எந்தொரு மனிதனும், சாவு பற்றி அலட்டிக்கொள்வது கிடையாது. பிறப்பு உண்டு என்பதுபோல இறப்பு உண்டு. சாவென்பது ஒரு நிகழ்வு. எப்போது நடக்கவேண்டுமோ அப்பொழுது நடக்கிறது. அதனால் பயங்கரமாக இருக்கிறது. ஆனால் பயப்பட ஒன்றுமில்லை. வாழ்வது எப்படி மகத்தானமானதோ அது போலவே சாவும் மகத்தானமானது. சாவு துயரமோ கஷ்டமோ இல்லை. இருப்பதுபோலவே இல்லாமல் போவது. அது அறிய வேண்டும். எதையும் அறிய முடியும் என்பது போலவே அறியாமலே வாழ முடியும். வாழ்க்கை அதனோடு சம்பந்தப்பட்டது இல்லை. இன்னும் சொல்லப் போனால், வாழ்க்கை என்பது எதனோடு இருப்பது இல்லை. உள்ளே இருப்பது போல - வெளியில் இருக்கிறது. வெளியில் இருப்பதுபோல உள்ளே இருக்கிறது.

அததை செத்துப்போன பிறகு நான் ஒடிந்து போய் விட்டேன். நான்கு நாட்களுக்கு என்னால் ஒன்றுமே யோசிக்க முடியவில்லை. நான் தெரிந்து வைத்திருந்த

தெல்லாம் கைவிட்டுப் போய்விட்டது. தன்னந்தனி ஆளாகி விட்டேன். அது உண்மை. துயரம் மகிழ்ச்சி இல்லை. கஷ்டமென்றால் அது கஷ்டந்தான். எதையும் சந்தோஷமாக எடுத்துக்கொள் என்பதெல்லாம் ஏமாற்று வேலை. எதையும் நீயாக எடுத்துக்கொள்ள முடியாது. உனக்கு எது அப்படிக் கிடைக்கிறதோ அதை அப்படியே வாங்கிக்கொள்ளவேண்டும்.

அத்தையின் சாவை, நான் அப்படித்தான் எதிர் கொண்டேன். சாவு என்பதன் வெறுமையை நான் உணர ஆரம்பித்தேன். உன்னைச் சுற்றி எவ்வளவு பெரியகூட்டம் இருந்தாலும் நீ தனி ஆள். கூட்டத்தில் ஒருவன். நீ கரைந்து போக முடியாது. தனியாக இருப்பவன். அதே மாதிரி தனியாக இருக்கும்போது பெருங்கூட்டம். இப்படி இடம் மாறி மாறி இருப்பதால் தான், வாழ்க்கை என்பது சுவாரசியமாக இருக்கிறது.

மாலைப்பொழுதில் நான் வீட்டிற்குள் வந்தேன். நடு கூடத்தில் விளக்கு எரிந்துகொண்டு இருந்தது. விளக் கொளியில் நான் அத்தையைப் பார்த்தேன். அத்தை வீடு முழுவதும் நிறைந்து இருப்பது மாதிரி இருந்தது. எந்த நினைவு மகிழ்ச்சி கொடுக்குமோ - அது அடிக்கடி வந்து கொண்டு இருந்தது.

"அம்மா" என்றேன்.

உள்ளே இருந்து அம்மா வந்தது. என்னைப் பார்த்து தலையசைத்தது. நான் அம்மாவைப் பார்த்து பயந்து போனேன்.

"அம்மா?"

"அத்தை தெய்வம் போயிடுச்சி"



நான் அம்மாவைப் பார்த்தபடி இருந்தேன்; அம்மா எரியும் விளக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது.

அத்தை தெய்வம். அதுவும் கண்கண்ட தெய்வம். தெய்வத்தை காண முடியுமா என்றால், நான் அத்தையைக் காட்டுவேன். எனக்கு அதில் தயக்கம்; வெட்கம் எல்லாம் கிடையாது. தெய்வம் துதிக்கப்படுவது மாதிரி நிந்திக்கவும் படுகிறது. அது தெய்வத்தின் குற்றமில்லை. தெய்வம் இகழ் புகழ் என்பதைக் கடந்தது. அது இருக்கிறது. காண்பதும் காணாமல் இருப்பதும் உன் விருப்பம்.

தெய்வம் இல்லை என்பார்க்கு இல்லை. அதில் சந்தேகம் கிடையாது. உண்டு என்பார்க்கு உண்டு. இருக்கிறது. அதுவும் ஐயமற்றது. தன் சுயநலத்திற்கு ஏற்பது உண்டு என்பாரும்; இல்லை என்பாரும் இருக்கிறார்கள். அது அவர்கள் பிரச்சினை. தெய்வத்தின் பிரச்சினை இல்லை. தெய்வம் அதில் சம்பந்தப்படுவதில்லை. தன்னைப் பற்றிய சிக்கலில் சிக்கிக்கொள்ளாமல் தெய்வம் இருக்கிறது.

அத்தை இருந்தது மாதிரி, என்று சுலபமாகச் சொல்லி விடலாம். அது எல்லாவற்றிலும் இருக்கும். ஆனால் எதிலும் மாட்டிக்கொண்டுவிடாது. அப்படிப்பட்ட அத்தை நிந்திக்கப்பட்டபோது பொங்கி எழுந்து விட்டது. தெய்வம் பீடத்திலிருந்து எழுந்து வந்த் கதைதான். அம்பாள் அமர்ந்திருக்கும் இடந்தான் எல்லோர்க்கும் தெரியும். பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்டதும் அதுதான். தெய்வம் எழுந்து போனால் சூன்யத்தைப் பார்க்க முடியாது. அது அவலம். கேவலம். ஆனால் அது தெய்வத்தின் குறை இல்லை.

அப்படித்தான் அத்தை. அதன் மீது மாமா பழி சுமத்தியதும், அத்தை ஒரு சொல் மறுத்துப்பேசவில்லை.

மாமாவை ஒரு பார்வைப் பார்த்துவிட்டு படியிறங்கி வந்து விட்டது. அப்புறம் அதுபற்றி பேசவே இல்லை. அத்தை பேசவில்லையே தவிர ஊரெல்லாம் அது பேச்சாகி விட்டது.

மாமா குடும்பம் பெரிய பணக்கார குடும்பம். தரங்கம்பாடியிலும், சீர்காழியிலும் மூன்று - அரிசி மில். கும்பகோணத்திற்கும் சிதம்பரத்திற்கு இரண்டு பஸ் ஓடிகொண்டு இருந்தன. முதன் முதலாக கார் வாங்கிய குடும்பம் என்ற பெருமைகூட மாமா குடும்பத்திற்கு உண்டு. செல்வமும் செல்வாக்கும் கொண்ட குடும்பந்தான். மாமாவின் தாத்தா முத்துக்குமாரசுவாமி முதலியார் உப்புசத்தியாகிரகத்தில் கலந்துகொண்டு ராஜாஜியோடு வேதாரின்யத்திற்கு நடைப்பயணம் சென்றவர். கடற்கரையில் உப்பெடுக்கும்போது போலீஸ் தடியடி நடத்தியது. அதில் காதில் அடிபட்டு செவிடாகி போனார்.

மனிதன் செவியை இழப்பது; அதுவும் நடுவயதில் நுட்பமான செவியை இழப்பது என்பது கொடுமை. அனுபவத்தைப் பறிப்பதுதான் அது. அது எவர்க்கும் நேரக்கூடாது. அத்தை தான் செவியால் கேட்டதால், மாமாவை விட்டு வந்துவிட்டது. ஒரு சொல்; சிறு சொல் அத்தையை சிறுமைப்படுத்திவிட்டது. அதைத்தாள முடியவில்லை. எல்லாவற்றையும் துறந்து வந்துவிட்டது. அது பெண்களின் இயல்பு. அநீதி என்பதை பொறுக்கவே முடியவில்லை. உலகம் தெரியாது; வீடுதான் உலகம். முன்கட்டு தெரியாது. பின்கட்டுதான் ராஜியம் என்று பெண்களைப் பற்றி எத்தனைத் தான் அவதூறு சொன்னாலும் அறிந்து கொள்வதிலும், புரிந்து கொள்வதிலும் பெண்களுக்கு இணையாக ஆண்களைச்



சொல்லமுடியாது. புரிந்துகொண்டதைப் பற்றி பேசுவதில்லை என்பதால் புரியவில்லை என்பது அர்த்த மில்லை. அறிவு கெட்டத் தனத்திற்கு ஆட்பட்டு பேசாமல் இருக்கலாமே தவிர - தெரியாமல் வாய்மூடி இருப்பதில்லை.

நான், பெண்களை கண்ணகியாகத்தான் பார்க்கிறேன். கோவலன் என்ன நல்ல கணவனா? புத்திசாலியா? அவன் எதற்குத் தகுதியானவன்? உதவாக்கரை. ஆசை மனைவியை - தன் மீது அளவற்ற காதல் கொண்டு இருந்த கண்ணகியை அரியாதவன். இன்னொருத்தியோடு மயங்கிக் கிடந்தவன். புத்தி தெளிந்தபோது கண்ணகியைத்தான் தேடிக்கொண்டு வருகிறான். உண்மையான காதல் கொண்ட மனைவி என்ன செய்வாளோ - அதையே கண்ணகி செய்தாள். அதாவது முதலில் அவனை மன்னித்தாள். பெரும் குணம் படைத்த பெண்ணாள்தான் அப்படிச் செய்யமுடியும். பிறகு வாணிகம் செய்து பொருளீட்டி வாழ மூலதனம் போட சிலம்பைக் கொடுத்தாள்.

உள்ளூரில் வாழ வெட்கப்பட்ட கணவனோடு மதுரை மூதூர்க்குச் சென்றாள். அதுவரையில் கண்ணகி ஒரு பெண். வெளியுலகம் தெரியாதவள். அடக்கமான பெண். அடங்கி இருப்பது அறியாமையால் இல்லை. எல்லாம் அறிந்ததால் ஆவது.

அநியாயமாகத் தன் கணவன் கொலை செய்யப் பட்டதும் பொங்கியெழுந்து "தெய்வம் உண்டுகொல்... தெய்வமும் உண்டு கொள், சான்றோறும் உண்டுகொல் சான்றோறும் உண்டுகொல்..." என்று தெருவிலே அலைந்தாள்.

அவள்தான் தெய்வம். இன்னொரு தெய்வம் ஏன்? அதுதான் வாழ்க்கை.

மாமாவிற்கு நாக்கில் சனி. நல்ல மாமா என்னமோ புத்தி தடுமாறி அத்தையைப் பற்றி அவதூறாகப் பேசி விட்டார். என்ன சொன்னார் என்று யார்க்கும் தெரியாது; அது அத்தை, மாமா சம்பந்தப்பட்டது.

மாமாவிற்கு சொன்னதைத் திருப்பிச்சொல்ல தைரியமில்லை. அத்தைத் தன் செவியால் கெட்டதை வாயால் சொல்ல விரும்பவில்லை. அவ்வளவுதான். மாமாவின் நிந்தனையை, அத்தையால் தாள முடிய வில்லை. மறத்தல் மன்னித்தல் எல்லாம் ஒன்றும் செல்லுபடி ஆகவில்லை.

எத்தனையோ முறை மாமா மன்னிப்புக்கேட்டு வந்தார் என்று கேள்விப்பட்டு இருக்கிறேன். ஆனால் அத்தை அவரை மன்னிக்கத் தயாராக இல்லை என்பது போல, மாமாவை பார்க்கவும் விரும்பவில்லை.

இல்லை, நான் அவரைப் பார்க்க மாட்டேன் என்று ஒரு சொல்தான் அத்தைச் சொன்னது. அது அப்பாவால் ஒன்றும் பேசமுடியாமல் போய்விட்டது. அப்புறம் அத்தைப் பற்றி யாரும் பேசவில்லை. ஒன்றரையாண்டில் அத்தையின் இல்வாழ்க்கை முடிந்து, போய்விட்டது. அது, என்னவோ விதியின் கதைதான். எல்லோர்க்குமு வாழ்க்கை விதிக்கப்பட்டிருக்கிறது. ஏன், எதற்கு இப்படி விதிக்கப்பட்டு உள்ளது என்று கேள்வி கேட்கலாம். ஆனால் விதிக்கப்பட்டதை மாற்ற முடியாது. திருத்த முடியாது.

நல்வாழ்க்கை - கணவனோடு சேர்ந்து வாழலாம் என்று வந்த கண்ணகிக்கு நல்வாழ்க்கை கிடைத்தது. ஆனால் கணவனோடு இல்லை. தெய்வமானாள்.

கண்ணகி தெய்வம்.



அத்தையை அம்மா தெய்வம் என்றது சரிதான். அம்மாவும் ஒரு தெய்வந்தான். அதில் நல்ல தெய்வம், கெட்ட தெய்வம் கிடையாது. அம்மா நல்ல தெய்வம்; அத்தை பெருந்தெய்வம். நான், என்னவோ, என் அத்தை என்பதற்காகச் சொல்லவில்லை. எது உண்மையோ அதைச் சொல்கிறேன். கற்றதில் இருந்து பெற்றதைச் சொல்கிறேன். கற்க கசடற என்பதுதான் கற்பதன் அரிச்சுவடி. நான் கற்றதால் சொல்கிறேன்.

நான், கற்றது என்பது புத்தகத்தால் மட்டுமல்ல. எனக்கு கற்றலின்மீது மதிப்பு மரியாதை உண்டு. அறிவு என்று அறியப்பட்டு இருப்பதெல்லாம் நூலில்தான் பதிவு செய்யப்பட்டு உள்ளது. எழுத்து என்று ஒன்றை மனிதன் கண்டுபிடிக்காமல் இருந்திருந்தால், அவன் வாழ்ந்ததின் தடையம், கற்றதையும், பெற்றதையும் கற்றாமல் விட்டதையும் தெரிந்துகொள்ள முடியாமல் போய் இருக்கும்.

## 8

மனிதன் எத்தனையோ விஷயங்களைக் கண்டு பிடித்து இருக்கிறான். அதில் பலவற்றால் நன்மையும், சிலவற்றால் தீமையும் அடைந்து இருக்கிறான். ஏனெனில் மனிதன் நன்மை தீமை என்பதற்கு அப்பால் இல்லை. அவன் ஒரு விதத்தில் தீமை; இன்னொரு விதத்தில் நன்மை. நன்மையும் அவனே, தீமையும் அவனே. நன்மை தீமைகளில் இருந்து மனிதனைத் தனியாகப் பிரித்துவிட முடியாது. அதற்கு உதாரணம் நான் தான்.

நானே கெட்டவன்.
நானே நல்லவன்.

எனக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம் நான் என்னைப்பற்றி அறிவேன் என்பதுதான். மனிதர்களில் பலர்க்குத் தன்னையும் தெரியாது மற்றவர்களையும் புரியாது. அதுதான் பிரச்சினை. அதன் காரணமாகவே ஒன்றுக்குள் ஒன்றாகச் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

மனிதன் தனியாக இருந்தாலும் தனி இல்லை. அவனோடு அம்மா, அப்பா, ஆயா, தாத்தா, மாமா, அத்தை, பெரியப்பா, அக்கா, சித்தப்பா, தங்கை என்று பெருங்கூட்டம் இருக்கிறது. அப்புறம் சிநேகிதர்கள், விரோதிகள், அதிகாரிகள் என்று மனிதன் பெருங் கூட்டத்தில்தான் இருக்கிறான்.

புத்திசாலி தனியாக இருக்கும்போது கூட்டத்தில் கலந்துவிடுகிறேன்; கூட்டமாக இருக்கும்போது தனி ஆளாகி விடுகிறேன். அதனால்தான் நான் எங்கும் இருக்கிறான்.

நான், அடிக்கடி என்னைப்பற்றி நினைத்துக் கொள்வேன். நானென்றால், நான் இல்லை. இறந்தவன்; இருக்கப்போகிறவன், இருக்கிறவன் என்று எல்லோரையும் பற்றி நினைத்துக்கொள்வேன். அதுதான் என் இருப்பு. மனிதன் என்பதின் இருப்பு. இருக்கிறவன்; இல்லாமல் போகிறவன்; இருக்கப்போகிறவன் - என்று மனிதனைப் பற்றி மனிதன் தான் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறான். மனிதனோடு ஆயிரக்கணக்கான தாவரங்களும், இலட்சக்கணக்கான உயிரினங்களும் உலகத்தில் இருக்கின்றான். அதன் வாழ்க்கை அவற்றுக் கெல்லாம் தெரியாது. ஆனால் மனிதனுக்கு தன் வரலாறு தெரியும்; தாவரத்தின் சரித்திரம் தெரியும். கடல், காற்று,



வனம், வானம்- என்று எல்லாவற்றையும் பற்றி மனிதன் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறான். அவனுக்குத் தன் கதைதான் முக்கியம் இல்லை. உலகத்தில் உள்ள ஒவ்வொன்றும் முக்கியந்தான். எனவே இருந்ததுப் பற்றி எழுதிவைத்து இருக்கிறான். இருக்கிறதுப் பற்றியும் எழுதி வருகிறான். அது சரியா என்றால், அவசியம் இல்லை என்பேன்.

வாழ்க்கையில், சரி, தவறு என்று எதுவும் இல்லை. அது ஒரு மனநிலை. நிஜத்தில் எல்லாம் தவறு; இன்னொரு விதத்தில் எல்லாம் சரி.

தவறு, சரி என்று தீர்ப்பளிக்க யாருக்கும் உரிமை இல்லை.

ஏசுநாதர்க்கு தீர்ப்பளித்தவர்கள் நிந்திக்கப்படு கிறார்கள். குற்றம் சாட்டப்பட்டு தண்டனை பெற்று சிலுவையில் அறையப்பட்ட ஏசுநாதர் ஜீவித்துக்கொண்டு இருக்கிறார். ஆனால் அவர்க்குத் தண்டனை கொடுத்த வர்கள் செத்துப்போய்விட்டார்கள்.

அதாவது யார்க்கும் எதன் மீது தீர்ப்பு வழங்க அதிகாரம் கிடையாது. அப்படிப்பட்ட ஓர் உரிமையை கடவுள் யார்க்கும் கொடுக்கவில்லை. அதை அவரே கையில் வைத்துக்கொண்டு இருக்கிறார். கடவுள் சாம்ராஜியத்தில் குற்றமும் கிடையாது நீதியும் கிடையாது. தண்டனையும் இல்லை. யார் யாரைத் தண்டிப்பது. அந்த உரிமை எப்படி யாருக்கு வந்தது.

யோசித்தால் வாழ்க்கை ஒன்றுமே இல்லை. எது இல்லையோ அது பிரமாண்டமாக கட்டி வடிவமைக்கப் பட்டு இருக்கிறது. உலகத்து-முதல்தரமான தச்சர்கள், பொற்கொல்லர்கள், கட்டிடக்கலைஞர், சிற்பிகள், ஓவியர்கள், கடைசியாக கவிஞர் அற்புதமாக - மாயாலோக

மென்று ஒரு உலகத்தைக் கட்டமைத்து இருக்கிறார்கள். அது வசீகரமும், வனப்புங்கொண்டது. இருக்கின்ற எல்லாவற்றையும்விட மேலானது. அறிந்தது புரிந்தது என்பதைப் புறந்தள்ளி என்றும் இருப்பது.

அதன் சுவாரசியம், புரிந்துகொள்ளப்பட்டதைவிட, புரியாமல் இருப்பதுதான் அதிகம் என்பதாலேயே வசீகரம் பெறுகிறது.

“உனக்கு முதுகுக்குப் பின்னால் உள்ளது தெரியாது” என்றான் பாண்டியன்.

நான் சிரித்தேன். பாண்டியன் தன்னை, தன் இயல்பை முன்னே வைத்துக்கொண்டு பார்க்கிறான். அதுதான் அவனுக்குத் தெரியும். யார்க்கு எது தெரிகிறதோ அதுதான் தெரியும். நீரளவே ஆகுமாம் நீராம்பல். தண்ணீர் உயரத்திற்குத்தான் ஆம்பல் உயரும். நான் அது இல்லை. பாண்டியன்கூட இருந்தாலும் பாண்டியன் இல்லை. அத்தையால் வளர்க்கப்பட்டிருந்தாலும் அத்தையாக முடியாது. பிறப்பிற்கு அப்பா காரணம் என்றால் மகன் அப்பன் இல்லை. மகளோ அம்மாவாக முடியாது. எல்லோரும் ஒன்றுபோல் இருந்தாலும் ஒன்று இல்லை. நான் வேறு ஒன்றென பிரகடனப்படுத்தினாலும் ஒன்று இல்லை. அதுதான் விசித்திரம்.

எது சொன்னாலும் அது அத்தை இல்லை.

அத்தை அற்புதமான பெண்யென்றால்

இல்லை, அதற்கு மேலே

அத்தை ஒரு தனிரகம் என்றால இல்லை, பொதுவான ரகம் - என்று மறுத்து மறுத்து சொல்லி விடலாம். அறிவால், நான் சொல்வதில்லை. அத்தை எதுவோ அதுபற்றி நான் சொல்கிறேன்.



நான் சொல்வது, என்னைப் பற்றியது இல்லை. நான் அறிந்ததில் இருந்து சொல்வதாகும். எனக்குத் தெரிந்து பலர் தெரிந்ததைத் தெரிந்தது என்றும், தெரியாததைத் தெரியாது என்றும் சொல்வது இல்லை. அதைத்தெரிந்து கொண்டபோது, நான் அதிர்ச்சி உற்றேன். கோபம் கோபமாக வந்தது. என் தாத்தா தியாகராஜ முதலியாரிடம் கேட்டேன்.

ஒரு சிரிப்புதான் பதிலாக வந்தது.

ஒரு கேள்விக்கு சிரிப்பும் பதில்; அதுவும் ஒரு மொழிதான் என்று புரிந்துகொண்டேன்.

வாழ்க்கை என்பதுபுரிந்துகொள்வதுதான். புரியப் புரிய வாழ்க்கை அர்த்தம் பெறும். அத்தை மாமாவைப் புரிந்துகொண்டபோது பிரிந்துவந்துவிட்டது; நான் அத்தையைப் புரிந்துகொண்டபோது மாபெரும் தெய்வமாகிவிட்டது. தெய்வம் என்பது வெளியில் இருப்பது இல்லை. அகத்தின் ஆழத்தில் இருப்பது; நான் அறிந்துகொண்டது அதுதான். அறிந்தால் நான் அதிகமாக பலன் பெற்றேன்.

என் அறிவு; என் ஆற்றல்தான் கங்கைககரைக்கு என்னை இழுத்துக்கொண்டு வந்துவிட்டது. கங்கைக்கரை சாவிற்கான இடம் என்று ரொம்பகாலமாக ஏற்கப்பட்டு இருக்கிறது. நான் சாக வரவில்லை. எனக்குச் சாவில் சம்பந்தம் கிடையாது. மனிதன் என்றால் மரணமற்றவன்; காலம் காலமாக வாழ்கிறவன். தான் வாழ்ந்ததின் தடயத்தை பொறித்துவிட்டுப் போகிறன். அதனாலேயே ஜீவித்துக் கொண்டு இருக்கிறவன்.

நெடுங்காலமாக வாழ்கிறவர்கள் பற்றி நான் ஒரு பட்டியல் போட்டுவைத்து இருக்கிறேன். அவர்கள் எல்லாம் மரணமில்லாத மகான்கள்.

என் பட்டியலில் சண்டைக்காரர்கள், வாளெடுத்தவர்கள் அரசாள நாயாய்ப்பேயாய் அலைந்தவர்கள் எல்லாம் கிடையாது.

என் பட்டியலில் மகா அலக்சாண்டர்க்கு இடமில்லை. தலைக்கு இடம் இல்லையென்றால் வாலுக்கு எப்படி இடம் கிடைக்கும். நான் அதில் கறார் ஆசாமி. தயவு, தாட்சண்யம் காட்டமாட்டேன்.

எனது பட்டியலில் முதல் ஆள் சாக்ரட்டீஸ். மரணமில்லா பெருவாழ்வு வாழ்கிற மாவீரன். வாள் எடுத்தது இல்லை; போர்க்களத்தைக் கண்களால் கண்டதில்லை. ஆனால் காலம் காலமாக மக்களின் இதய ஆசனத்தில் கம்பீரமாக வீற்று இருக்கிறான். அப்புறம் புத்தர். ஞானி. உலகம் காலம் காலமாகக் கொண்டாடி வரும்ஞானி. ஞானிகளுக்கெல்லாம் ஞானி. நெடுங்காலமாக மக்களின் மனத்தில் வீற்றிருக்கிறவர். எண்பத்திரண்டு ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார். முப்பத்தைந்து வயதில் அவர் சுழற்றிவிட்ட தர்மசக்கரம் சுழன்று கொண்டே இருக்கிறது. அதற்குக் கடல், மலை, ஆறு, பாலைவனம் - என்று பாகுபாடெல்லாம் கிடையாது. எந்தச் சக்தியாலும் தர்மசக்கரத்தைத் தடுத்து நிறுத்த முடியாது. மன்னன், பேரரசன், சிற்றரசன், அயோக்கியன் - என்று யாராலும் அதை நிறுத்தமுடியாது. ஏனெனில் அது மக்களின் தர்மசக்கரம். மனிதர்களின் இதயத்திற்குள் புகுந்து ஓடுவது. அதன் வலிமை வெளியில் இல்லை. மனத்தின் உள்ளே இருக்கிறது. உள்ளே இருப்பதை தடுக்க முடியாது; கட்டெரிக்க முடியாது. எந்தச் சக்தியாலும் சுழலும் சக்கரத்தைத் தடுக்க முடியாது.

ஒன்று நிலைத்திருக்க நிருபணம் ஆகவேண்டியது இல்லை. எது யார்க்கு நிருபணமாக வேண்டும்? அறிவதுப்



அறியப்படுவது அவனவனைப் பொறுத்தது. அறிவதால் உனக்குப் பலன்; அறியாவிட்டால் உனக்குத்தான் இழப்பு.

புத்தரின் தர்ம உபதேசத்தைத் தெரிந்துகொள்ளா விட்டால் புத்தர்க்கு என்ன இழப்பு; அதை பாலி மொழியில் பிராமி எழுத்துக்களில் பொறித்துவைத்த அசோகனுக்கு என்ன இழப்பு. அதை அறிவது தான் அறிவு.

நான் பள்ளிக்கூடம் போகும்போது, குசத்தெருவில் மாணிக்க வேளார் சக்கரம் சுற்றுவதை பார்த்து இருக்கிறேன். சக்கரம் சுற்றுவதைப் பார்ப்பது அற்புதமான அனுபவம். பார்க்கப் பார்க்கப் பரவசம் ஊட்டக்கூடியது. நான் ஒவ்வொரு அடியாக முன்னே எடுத்துவைத்து சக்கரத்தின் பக்கம் போய்விடுவேன்.

என்னுடைய ஆர்வத்தையும் அக்கறையையும் கண்ட மாணிக்கவேளார், ஒரு புன்சிரிப்பு சிரித்தபடி சக்கரத்தை இன்னொரு சுற்று வேகமாகச் சுற்றிவிடுவார். சக்கரம் எனக்கு மனசுக்குள் சுற்றுவது போல இருக்கும். எனக்கு எதில் ஈடுபாடு இருக்கிறதோ - அது வெளியில் நடக்காது. அது என் மனசுக்குள் நடப்பது போலவே இருக்கும்.

பாண்டியனிடம் ஒருநாள் அதுப்பற்றி சொன்னேன். அவன் என்னை விசித்திரமாக ஒரு பார்வைப்பார்த்து விட்டு, "உனக்குப் பித்துப்பிடுச்சி இருக்கு" என்றான்.

"நீ டாக்டர், கண்டு பிடிச்சிட்டே"

"அதற்கு டாக்டராக இருக்கவேணாம் அதுதான் முக்கியம்"

நான் பேச்சை நம்புகிற ஆளில்லை. சொல், வார்த்தை என்பதெல்லாம் திறமையை வெளிக்காட்டப் பயன்படுத்தப்படுவது, மேதை; ஞானி சொல்லாட

மாட்டான்; எதை எதனாலும் வெட்டமுடியாதோ அதுதான் ஞானியின் ஆயுதம்.

ஞானியை அறிந்துகொள்ளவேண்டும். ஒழித்து, மறைந்து ஞானி வைத்துக்கொண்டிருக்கும் மேதமையை யெல்லாம் உன்னுடைய திறமையால் பிடுங்கிக்கொண்டு வரவேண்டும். நான் அறிந்த வரையில், எந்த ஞானியும் தன்னை ஒரு ஞானி என்று சொல்லிக்கொள்வதில்லை. அது அறிந்ததில் இருந்து தெரிந்துகொண்டது.

எனக்கு முதலில் தெரிந்த ஞானி மாணிக்க வேளார். நான் பார்த்தபோது அவர்க்கு நாற்பத்தெழு நாற்பத்தெட்டு வயதிருக்கும். இப்பொழுது அவர் இருக்கிறாரோ இல்லையோ? இருப்பதும் - இல்லாமல் போவதும் முக்கியமில்லை. ஏனெனில் மாமனிதர்கள் ஒருபொழுதும் சாவதில்லை என்பதுகூட சரியில்லை. மனிதன் என்பவன் சாவதே கிடையாது. சாவு தோற்றதென்றால் அது மனிதனிடந்தான். ஏனெனில் இருந்த மனிதன் பற்றி இருக்கிற மனிதன் பேசுகிறான். அவனின் தொடர்ச்சியாக இவன் இருக்கிறான். இல்லாத ஒன்றில் இருந்து மனிதன் வருவதில்லை. ஏற்கனவே இருக்கிறவனில் இருந்தே மனிதன் வருகிறான். நான் சொல்வது புரியவில்லை என்றால் நான் அதற்குப் பொறுப்பில்லை. தெரிந்து கொள்கிற அளவிற்கு அறிவு இல்லை. நான் சொல்வது சுடுவது மாதிரி இருக்கும். என், நோக்கம் குறை சொல்வது, குற்றம் சாட்டுவதில்லை. எது உண்மையோ அதை அப்படியே சொல்வது. என் பெருமையை நானே சொல்லிக் கொள்வதில்லை.

எனக்கு அடக்கம், தன்னடக்கம் என்பது எல்லாம் கிடையாது. இன்னொருவர் மெச்ச நான் எதையும் செய்வதில்லை. பேசுவதில்லை. நான் செய்வதையும், பேசுவதையும் பார்த்துவிட்டு பாண்டியன், "நீ எதை எங்க



சொல்லக்கூடாதோ அதைச் சொல்லுற. அதுதான் எனக்கு உன்ன ரொம்ப பிடித்திருக்கு" என்றான்.

நான் அவனையே பார்த்துக்கொண்டு இருந்தேன்.

"நிஜத்தில் நீ பெரிய தைரியசாலி" நான் சிரிப்பு சிரித்தேன்.

"உன்ன புகழ சொல்லுல. நிஜத்தைச் சொல்லுறேன். அதுனால நீ சிக்கல்ல மாட்டிக்கற. அது உனக்குத் தெரியல"

"எனக்கொன்றும் சிக்கல் இல்ல"

"உனக்குத் தெரியல. எல்லாம் தெரிகிற உனக்கு எதை எங்க பேசக்கூடாதென்று தெரியல"

"சரி"

"நீ ரொம்ப கஷ்டப்படபோற. அதெ நினைச்சாதான் வருத்தமா இருக்கிறது"

பாண்டியன் எனக்கு ரொம்ப சிநேகிதம். படித்தவன் என்று சொல்ல முடியாது. படிப்பில் அவனுக்கு ருசியே கிடையாது. கவிதை, நாவல், சிறுகதை எதுவும் படிக்க மாட்டான். இசை அவன் கேட்டதில்லை. நாட்டியம் பார்த்ததில்லை என்றான். தெற்கத்திஆள். கன்னங்கரெலென்று இருப்பான். பெரிய பெரிய பற்கள். நேர்வகுடு எடுத்து தலைவாரி கொண்டிருந்தான். பேசமாட்டான்; அதனால் பேசத்தெரியாதவன் இல்லை. பேசவேண்டாம் என்ற தீர்மானத்தோடு பேசாமல் இருந்தான். இந்த மாதிரி ஆள்களை நான் நிறைய பார்த்திருக்கிறேன். மனத்தில் பேச கொள்ளையாசை இருக்கும். ஆனால் கூச்சம், பயம் பழக்கமின்மையால் மனசைப்பூட்டி வைத்துக்கொண்டு இருப்பார்கள். அதில் ஆண்களைவிட பெண்கள் அதிகம். பூட்டைத்திறந்தால் ஓயாமல் பேசிக்கொண்டே இருப்பார்கள். வாய் ஓயாது; பேசுவதைவிட, பேசாமல்

இருப்பதே நல்லது என்று நினைக்க வைக்கத் தோன்றும். ஆனால் அது சரியில்லை. சொன்னால் சரியில்லாமல் போய் விடுமோ என்ற அச்சத்தில் புழுங்கிக்கொண்டு மனசுக்குள் பேசிக்கொண்டே இருக்கிறார்கள்.

## 9

நான் யார் பேசினாலும் கேட்பேன். மனிதர்களுக்குப் பேசுவதில் உள்ள ஆர்வம் கொஞ்ச நஞ்சமில்லை. லட்சம் ஆண்டுகளாகப் பேசிக்கொண்டு வருவதின் தொடர்ச்சியாகப் பேசுகிறார்கள். எனவே தான் பேச்சில் நெளிவு, சுளுவெல்லாம் ஏறி இருக்கிறது. பேசுவதில் உள்ள சாமர்த்தியம் எழுதுவதில் கிடையாது. ஏனென்றால் பேச்சு பழையது; இயற்கையான சப்தத்தின் அடிப்படையில் தோன்றியது. வாயில் தோன்றும் நாற்பத்திரண்டு வகையான ஒலியில் இருந்துதான் லட்சக் கணக்கான சொல்லை உச்சரிக்கிறார்கள். ஒரு சொல்லும் இன்னொரு சொல்லும் ஒன்று போல் இருந்தாலும், உச்சரிப்பு வித்தியாசப்பட்டது. பேச்சில் இருக்கும் வசிகரம் எழுத்தில் கிடையாது.

என்விதி நான் அலைகிறேன். அதில் எனக்கு சிரமமில்லை. அலைவதில் மட்டுந்தான் சிரமமில்லை என்பது இல்லை. எனக்கு எதிலும் சிரமமில்லை. மிருளாளணியோடு சிநேகிதமாக இருந்தபோதும் எனக்குச்



சிரமமில்லை. என் ஆசை மனைவி அழகி பாரிஜாதத்தோடு குடும்பம் நடத்தியபோது சிரமமில்லை. சிரமமென்று எதுவும் என்னை அண்ட முடியாது. எதையும் அறிவால் அறிந்து களைந்துவிடுவேன். பாரிஜாதம் செத்தப்பிறகுகூட எனக்குச் சிரமமில்லை.

நான் அசட்டுத்தனம், மனிதாபிமானம், இரக்கம் என்ற குணமெல்லாம் கொண்டவன் இல்லை. அதற்காக ஈரமில்லாதவன் என்பது இல்லை. எதுவும் எனக்கு நிரந்தரமான குணமல்ல. சூழ்நிலைக்கு ஏற்ப; எதிராளி சொல்வதை புரட்டிப்போட்டு பொருள் தெரிந்துகொண்டு காரியம் செய்கிறவன். அதனால் யாருக்கு என்ன கிடைக்க வேண்டுமோ அது கிடைக்குமாறு செய்துவிடுவேன். அதாவது என்னால் சிலர்க்குத் தண்டனை கிடைத்து இருக்கிறது. பலர்க்கு வெகுமதி கிடைத்து இருக்கிறது. வெகுமதி பெற்றவன் தன் திறமைக்கு, சாதனைக்குக் கிடைத்தது என்று கமுக்கமாக இருப்பான். அவனுக்குத் தன்மேல பெரிய மதிப்பு. அறிவாளி என்ற நினைப்பு. அதைத் தகர்ப்பது மாதிரி, நான் எதுவும் செய்யமாட்டேன். அற்பர்களின் சந்தோஷத்தைக் குலைக்கக்கூடாது. அதுவும், அறிவாளி செய்யக்கூடிய காரியமல்ல. மற்றவர்கள் எப்படியோ, நான் அறிவாளி. என்னால் இன்னொருவன் அற்ப சந்தோஷத்தைக் குலைக்க முடியாது

கோழைகள், முட்டாள்கள், திறமையற்றவர்கள் மற்றவர்களைக் குறைசொல்லிக்கொண்டே இருப்பார்கள். என்னை யாரும் கைத்தூக்கிவிடவில்லை. என் சாதி, என் சொந்தம், என் ஆசிரியர், கூட இருப்பவர்கள் எல்லாம் துரோகிகள். என்னை கிழேதள்ளி புதைப்பதில் கண்ணுங் கருத்துமாக இருக்கிறார்கள் என்று எல்லோரிடமும் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். அவர்களுக்குக் கேட்க ஆள் வேண்டும் என்பது இல்லை. ஆளைத் தேடிப்பிடித்து

வைத்துக்கொண்டு புலம்புவார்கள். யாரும் கிடைக்கா விட்டால் தனக்குத்தானே அரற்றிக்கொண்டு இருப்பார்கள்.

பேச்சியிலேயே பெரும் பேச்சு தனக்குத்தானே பேசிக்கொள்வதுதான். யாரும் கேட்க முடியாது என்ற தைரியத்தில் என்னென்னவோ பேசுகிறார்கள். நிஜத்தில் மனிதன் மனத்தோடு பேசிக்கொள்வதுதான் அதிகம். நாக்கைச் சுழற்றி சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டு பயந்து பயந்து பேசுகிற மனிதன் தனக்குத்தானே பேசுவதைப் பதிவுபண்ண வைத்தால் ஞானி காணாமல் போய் விடுவான். அவ்வளவு மோசமும் அப்பட்டமாகத் தெரிந்து விடும்.

பாண்டியனிடம் ஒரு நாள் பேச்சுப் பற்றி கொஞ்சம் பேசினேன். தனக்குத்தானே பேசிக்கொள்வதற்கும் - வெளியில் பேசுவதற்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துக் காட்டினேன்.

அவன் கையெடுத்துக் கும்பிட்டு, "அப்பா, நான் நிம்மதியாக இருக்கிறேன். என்னைக் குழப்பி விட்டுடாதே" என்றான்.

ஐயோ, பாவம்.

பேச்சே குழப்பிக் கிடக்கிறவனை தெளிவு அடைய வைப்பதுதான். அறியாமையைப் போக்கி அறியவைப்பது தான். ஆனால் எவனுக்கும் சுத்தச் சுயம்பாத அறிவின் சுடராக - தெளிவு என்பதின் உச்சமாக இருப்பதில் ஆசை இல்லை. முனைப்பு கிடையாது. தானும் குழம்பி மற்றவர் களையும் குழப்பிக்கொண்டு இருப்பதுதான் சுகமாக இருக்கிறது.

சும்மா இருப்பது சுகமில்லை. உடம்பில் எதுவும் சும்மா இருப்பது இல்லை. மூக்கு சுவாசித்துக் கொண்டிருக்கிறது. இதயம் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. காதுகேட்டுக்கொண்டு இருக்கிறது. மூளை கண்காணிப்பதோடு கட்டளை பிறப்பித்துக் கொண்டிருக்கிறது. அது உடம்பு பற்றியது. தாயின் வயிற்றில் கரு வளர்ந்து கொண்டே இருக்கிறது.



வானம் மழை பொழிகிறது.

காற்று வீசிக்கொண்டே இருக்கிறது.

தாவரங்கள் பூத்துக்குமுங்கி காய்க்கிறன.

செடி கொடிகள் மக்கி மண்ணாகின்றன.

எதுவும், எக்காலத்திலும் சும்மா இருப்பது இல்லை. நான் அறிந்துகொண்டது. சும்மா இரு என்றால் தொந்தரவு செய்யாதே. இடும்பு பண்ணாதே.

மனிதன் உலகத்தில் இடும்பு பண்ணுகிறவன். இயற்கையான விதியென்பது எதுவும் அவனுக்குக் கிடையாது. தன் பொருட்டு - தன் குடும்பத்தினர் பொருட்டு, நண்பர் பொருட்டு எதுவும் செய்வான். நீதி, தர்மம் என்பதெல்லாம் ஏதும் கிடையாது. தன் செயல்களை நியாயப்படுத்த பொய்யான காரியத்தை மெய்யென நம்ப தில்லு முள்ளு வேலைகள் செய்வான். மறைவாகவும், தெளிப்படையாகவும் செய்யும் காரியத்திற்கு ஒரு நியாயம் சொல்லுவான். அது அநியாயம் என்று அவனுக்கே தெரியும். ஆனால் அஞ்சாமல் செய்வான். அதையெல்லாம் பார்த்துப் பார்த்து நான், நம்பிக்கை இழந்து போகவில்லை. எப்படி வாழ்க்கை இருக்கிறது என்பதை எள்ளளவில் தெரிந்துகொண்டேன். தெரிந்துகொண்டதோடு நான் ஒத்துப்போவது இல்லை. எப்படி தனிவழியில் போவது சரியோ அப்படி போவேன். அதில் எத்தனையோ சிரமம் உண்டு. அதற்காக நான் எல்லோரும் போகும் வழியில் கால்பதித்துப் போவதில்லை.

ஒரோர் சமயம் நான் தியாகராஜ முதலியாரை அழைத்து கேட்பேன். நான் யோசனை கேட்பது என்றால் இந்த உலகத்தில் தியாகராஜ முதலியாரிடந்தான்.

பொய் கிடையாது என்னைத் திருப்திபடுத்த யோசனை கிடையாது. சரியென்றால் பாராட்டு. தவறு என்றால் தண்டனை.

உண்மையை உண்மையாகச் சொல்வதுதான் தியாகராஜ முதலியார். அத்னால்தான் நான் அவரிடம் யோசனை கேட்பது வழக்கம். நான் ரொம்ப பேர்களைப் பார்த்து இருக்கிறேன். அவர்கள் பற்றி அதிகம் பேசக்கூடாது. அற்பர்கள், கோழைகள், மானிட பதர்கள் புறம் சொல்லி, கொள் சொல்லி, அதிகாரிகளைப் புகழ்ந்து பாராட்டி காரியம் செய்து கொள்கிறவர்கள். அது பெருங் கூட்டம். எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது. காலம் காலமாக ஜீவித்துக்கொண்டே இருப்பது. அவன் சொல்வது பொய் என்று, காரியம் செய்துகொள்ள செய்கிற சூழ்ச்சி யென்று தெரிந்தாலும் - மூடர்கள் கேட்டுக்கேட்டுப் பரவசமடைகிறார்கள்.

ஒருநாள் சுப்பிரமணியம் வந்தான். காரியக்காரன். எந்தக் காரியத்தையும் எப்படிப்பட்ட ஆளாக இருந்தாலும், பொன் கொடுத்து, பெண் அனுப்பி பெற்றுவிடுவான். தேறல் கொடுத்து மயக்கி நிலை தடுமாற வைத்து விடுவான். ஆனால் நான் தான் செய்தேன் என்று தம்பட்டம் அடித்துக்கொள்ள மாட்டான்.

"ஐயா செய்தாங்க"

"ஐயாவிற்குப் பெரிய மனசு"

"ஐயாவால முடியாதுன்ன ஒன்னு கிடையாது" என்று கிரீடத்தை தலையில் வைத்துக்கொண்டே இருப்பான்.



"சுப்பிரமணியம், இங்க வா"

"ஐயா.... நான் சுப்பிரமணி, ஐயா"

"ஐயா, சார் என்றெல்லாம் சொல்லக்கூடாது"

"அது எப்படிங்க ஐயா, முடியும்? நான் சுப்பிரமணி."

"முயற்சி பண்ணு"

"அப்ப சுப்பிரமணி இருக்கமாட்டான்"

"நீ பெரிய ஆள்"

"இல்ல ஐயா. நான் நிஜமா ரொம்ப சின்ன ஆள். முகம் இல்லாதன். ஐயா தயவிலே ஜீவனம் பண்ணுறான்."

"பலே.. பலே"

"நிஜம், ஐயோ"

"சரி, உன் ஜால்ராவிற்கு மயங்காதவனை என்ன பண்ணுவே"

"பொண்ணவச்சி பிடிப்பேன்"

"அப்படியா?"

"நான் ரொம்ப சின்ன ஆள் ஐயா"

"பொண்ணு, பொன்னுக்கு எல்லாம் மசியாதவன என்ன பண்ணுவே"

"அது ரொம்ப சுலபம் ஐயா"

"அப்படியா?"

"அவன ஒரே வார்த்தையில கட்டி விடுவேன்"

எனக்கு தூக்கு வாரிபோட்டது

"நீ என்ன சொல்றே"

"நிஜம், ஐயா"

“நிஜம், பொய் எல்லாம் இருக்கட்டும் நீ என்ன சொல்லுவ அதெச்சொல்லு”

“எவ்வளவோ தெரிஞ்சி இருக்கிற உங்களுக்கு இது தெரியலியே, ஐயா, அதுதான் பார்க்கிறேன்”

“நீ சொல்லு, சுப்பிரமணி”

“போங்க ஐயா” என்று சொல்லிவிட்டு போய்விட்டான்.

“நான் பார்த்த ஆள்களிலேயே மகா புத்திசாலி சுப்பிரமணிதான். தன் அறிவை ஒழித்து மறைத்து ஆளை அடித்து விழ்த்தும் ரகசியத்தை அவன் என்னிடம் சொல்ல வில்லை. சொன்னால் புரியாது என்று போய்விட்டான் என்று நினைத்துக் கொண்டேன். நாடு சுபிட்சமாக இருக்கிற போது மன்னன் விதுசரன், விரலிகளோடு சல்லாபித்துக் கொண்டிருப்பார்கள் என்று படித்தது நினைவிற்கு வந்தது.

நான் பெரிய படிப்பாளி இல்லை. எங்கள் விட்டில் நிஜமான படிப்பாளி தியாகராஜ முதலியார். காவிரிக் கரையில், திருவாரூரில் பெரிய பங்களா கட்டிக்கொண்டு இருந்தார். உல்லாசபுருஷர். திருவானைக்காவல் கமலம் விட்டிலும், ஸ்ரீரங்கத்தில் ரங்கநாயகி விட்டிலும் அவர் பெரும்பாலும் இருந்தார். நாடகப் பிரியர். பம்மல் சம்பந்த முதலியார் நாடகத்தில் சபாபதியில் சின்ன வேடத்தில் நடித்து இருக்கிறார். எப்பொழுதும் இடுப்பில் பட்டு வேட்டிதான். மேலே பட்டுச் சட்டை. காலில் சிங்கப்பூர் செருப்பு. கழுத்தில் ஐந்து பவுன் சங்கிலி. கூட வைத்தியலிங்கம் என்ற நீண்ட பெயர்கொண்ட வைத்தி. வெள்ளி வெற்றிலைப் பெட்டி. தங்கமுலாம் பூசிய பாக்குவெட்டு. பனாரஸ் அத்தர். முதலியார் காரில்தான் புறப்படுவார். கூச்ச நாச்சமெல்லாம் கிடையாது.



சினிமா எடுக்க ஆவல்கொண்டு இருந்தார் அதற்காக கல்கத்தா சென்றுவந்தார். கல்கத்தாவில் நேருவின் பேச்சை தற்செயலாகக் கேட்டார். அவ்வளவுதான் ஆளே மாறிவிட்டார். உடை மாறியது; ரசனை மாறியது. உள்ளம் மாறியது. பட்டு பிதாம்பரத்தைக் களைந்துவிட்டு கதர் கட்ட ஆரம்பித்தார்.

அவர் முரட்டு பேர்வழி. எது பிடித்தாலும் அதில் உறுதியாக இருப்பார். திருவானைக்காவல் கமலம், ஸ்ரீரங்கம் ரங்கநாயகியை எல்லாம் மறந்துபோய் விட்டார். உல்லாச புருஷன் என்ற பெயரை ஒரே வருஷத்தில் துறந்து. ராஜாஜி பத்தராகி விட்டார். அவரைப்பற்றி ஒரே பேச்சுதான் உண்டு. என்ன நினைக்கிறாரோ அதுவாகி விடுவார். அப்புறம் அவர் மீது அவ நம்பிக்கை கொள்ள முடியாது.

உல்லாச புருஷன்.

குடிகாரன்,

நாடகப்பிரியன் - என்று பெற்று இருந்த பெயர்களை எல்லாம் துறந்து காங்கிரசின் அடிமட்டத் தொண்டராகி விட்டார். கோழிக்கறி பிரியர். நீடூர் இஸ்மாயில் விட்டில் மெகல் பிரியாணி சாப்பிடுவார். அதையும் விட்டுவிட்டார்.

ராஜாஜி, சோதனைக்கு மேல் சோதனை வைத்து கடைசி ஆளாக தியாகராஜ முதலியாரை உப்பு சத்தியாக் கிரகத்தில் சேர்த்துக்கொண்டார். ஆனால் மூன்றாவது நாளில் ராஜாஜி அபிமானத்திற்கு உரியவராகி விட்டார்.

தஞ்சாவூர்க்குப் போய், சரஸ்வதி நூலகத்தை ஒரு சுற்று சுற்றிவிட்டுத்தான் திருவானைக்காவல் கமலம் விட்டிற்குப் போவார் என்பது ஒரு பேச்சு. ராஜா சாம்போஜி படித்த புத்தகங்களில் பலவற்றை படித்து இருந்தார். பி.ஏ. முடித்து பட்டம் வாங்கி இருந்தார். இந்து பத்திரிகைக்கு

ஆசிரியர் பகுதிக்கு நாட்டுநிலை பற்றி பல கடிதங்கள்
எழுதியுள்ளார்.

நான் அவர் பெயரைத்தான் கொண்டு இருக்கிறேன். அவரிடம் இருந்த பல விஷயம் என்னிடம் கிடையாது. முதல் விஷயம் திருவானைக்காவல் கமலம். ஸ்ரீரங்கம் ரங்கநாயகி இந்த மாதிரியான பெண்ணுக்கு பெயர் முக்கியமல்ல; அவசியம் இல்லை என்பது என் அபிப்பிராயம். இளமையான மாதவி குட்டி, ராஜமகேந்திரம் சுசீலா பாரிஜாதம் மிருளாளணி எல்லாம் அற்புதம்.

நான் பெண்கள் பற்றி பேசுவதில்லை. அது பேசுவதைவிட அனுபவிக்க வேண்டியது. பெண் என்பவள் தனியாள். சந்தோஷம், மகிழ்ச்சி, ரசனை என்பதின் வெளிப்பாடு. எது மனத்திற்கு மகிழ்ச்சி அளிக்கிறதோ அதைப்பற்றி அதிகமாக விமர்சனம் பண்ணக்கூடாது. இருப்பதை ஏற்று, அனுபவிக்க வேண்டும். அதுதான் அதன் தர்மம். தர்மத்திற்கு எதிர் ஏதும் கிடையாது. இருப்பதெல்லாம் ஒன்றே ஒன்றுதான் அதைப் புரிந்துகொள்ளவேண்டும். ஆனால் நான் நல்லவன் இல்லை. என்னைப்பற்றி நான் சொல்வதை நம்புவது மாதிரியும் இருக்கும், நம்ப முடியாதது மாதிரியும் இருக்கும்.

## 10

நான் உண்மையை மட்டும் பேசுகிறேன். உண்மை என்பதை நிலை நிறுத்த முடியாது. அதாவது உண்மை என்பதாலேயே சாத்தியப் படாது. அப்படி இருக்கையில் உண்மையைப்



பற்றி பேசி நிலை நிறுத்துவது முடியாதது தான். முடியாது என்பதற்காக நான் எதையும் விட்டு விடுவது இல்லை.

என்னைப்பற்றி, நான் எனக்காகத்தான் சொல்லிக் கொள்கிறேன். இன்னொருவர்க்காக நான் எதுவும் சொல்ல வில்லை. நான் சொல்லி இருப்பதில் பலவற்றை சரியாகச் சொல்லவில்லை என்பது சொல்லிக்கொண்டே வருகையில் தெரிகிறது, அதுதான் சொன்னதின் சிறப்பு. எதையும் ஒரே மாதிரி சொல்ல முடியாது. வாழ்க்கையில் ஒருமுறை நடப்பது இன்னொரு முறை நடப்பது இல்லை. அதற்கு அந்தநிமிடந்தான் முக்கியம். அதோடு போய் விட்டது. அழகாகப் போனாலும் சரி அலங்கோலமாகப் போனாலும் சரி; போனது போனதுதான். எத்தனை முறை பேசினாலும் மறுபடியும் நிகழப்போவதில்லை. அதுவே அதன் சுவாரசியம். அதைத் தெரிந்துகொள்வது முதல்தரமான அறிவு. அதைப்பற்றி பேசுவது இரண்டாம் தரமான அறிவு. அறிவு என்பது ஒன்றுதான் என்றாலும் எல்லா அறிவும் என்று இல்லை. ஒன்றுக்குள் ஒன்று வித்தியாசப்பட்டது. வித்தியாசத்தின் சிறப்பு பிடிபடாமல் இருப்பதுதான். நான் அதைத் தெரிந்து வைத்துக்கொண்டு இருக்கிறேன்.

அதாவது நான் என் தாத்தா தியாகராஜ முதலியார் பெயரைக்கொண்டு இருந்தாலும், நான் அவர் இல்லை. அந்த தியாகராஜன் இல்லை. அவரிடம் இருந்துதான் நான் வந்து இருக்கிறேன். அவரின் பலகுணம் என்னிடம் இருப்பதுபோல இல்லாமலும் இருக்கிறது.

அவர் உத்தமர். சுதந்திரப் போராட்டதில் கலந்து கொண்டவர். தன் காலத்தின் முக்கிய நிகழ்வுகளில் பங்குபெற அறிவு பெற்றவர். ஓடி ஒழிந்துகொள்கிற ஆளில்லை. நல்லதற்கு முன்னேயும்; கெட்டதற்குக் கடைசிலேயும் நின்றவர்.

நான் யார்? தியாகராஜ முதலியார் இல்லை. அப்படியானால் நான் யார்? நான் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். என்னில் இருந்து என்னை அறிவதுதான் நான்.

நான் பாரிஜாதத்தை கொலை செய்யவில்லை என்று நீதிமன்றம் தள்ளிவிட்டது. நான் சொன்னதை எல்லாம் அது ஏற்றுக்கொள்ளவில்லை. எனக்குத்தான் சரியாகச் சொல்லத் தெரியவில்லை என்று இப்பொழுது படுகிறது. நடந்ததை, நடந்தவாறு சொல்வது சாத்தியமில்லை. அதில் அபிப்பிராயம், கருத்து, சொந்த ஈடுபாடு - என்று பல விஷயங்களும் சேர்ந்து விடுகிறது.

நானாக இருப்பவன், யாரோவாகி விடுகிறேன். அதுதான் என் பிரச்சினை. நான் எவ்வாறு நானாக இருப்பது? நானாக இருப்பதென்றால் இன்னொரு ஆளாக இல்லாமல் இருபது. அது முடியுமா என்றால் எப்படி முடியும்? என்னால் முடியாதது, ஆகாது - என்பது எதுவும் கிடையாது. இன்றைக்கு நினைத்தது நடக்கவில்லை என்பதற்காக எப்போதும் நடக்காது என்பது இல்லை. அதுதான் நான். என் ஜீவிதம்.

பெருகி ஓடும் கங்கையையும் - அதன் கரையில் இருக்கும் கீதாபவனத்தையும் மாறி மாறி பார்த்தபடி இருந்தேன். கங்கை அனாதிகாலமாக ஓடிகொண்டு இருக்கிறது. கீதாபவனம் புதிது. யாரோ பணம் படைத்தவர்கள் கட்டிப்போட்டு இருக்கிறார்கள். ஒரு காலத்தில் கீதாபவனம் இல்லை. இப்போது இருக்கிறது. இன்னும் சிலவாண்டுகள் கழித்து இல்லாமல் போய்விடும்.

நான் கைகளைப் பின்னால் கட்டியபடி கீதாபவனத்தில் வரைந்திருக்கும் அர்ச்சுனன் கலங்கி நிற்பதையும், கண்ணன் தர்க்க நியாயம்பேசி அவனை



போர்க்கு ஆயத்தப்படுத்துவதையும் பார்த்துக்கொண்டு நின்றேன்.

நான்தான் அர்ச்சுனன்.

நானே கண்ணன்.

நானே இருக்கிறேன். நானே இல்லாமல் போகிறேன்.

கீதாபவனத்தை வேகமாக ஒரு சுற்றுச் சுற்றி வந்தேன். ஒரு குஜராத்தி குடும்பம் கீதை படித்துக் கொண்டிருந்தது. சமஸ்கிருத மொழி. ஒவ்வொரு சொல்லும் என் காதில் வந்து விழுந்தது. ஒன்றும் புரியவில்லை. எதுவும் புரியவேண்டும் என்ற அவசியம் கிடையாது. புரிவதால் ஆவதும் புரியாததால் கெடுவதும் கிடையாது. எது எப்பொழுது நிகழுமோ அது அப்பொழுது நடைபெறும். அதுதான் என் நம்பிக்கை. ஏதும் காரண காரியம் இல்லாமல் நடைபெறவில்லை. சிலவற்றை என்னால் அறிய முடிகிறது. என் அறிவை துலக்கி அனைத்தையும் அறியவேண்டும். இப்பொழுதே நான் அறிந்து இருப்பது அதிகம் என்பது எனக்குத் தெரிகிறது. தெரிகிறது என்பது மட்டுமல்ல, அதைத் தைரியமாகச் சொல்கிறேன்.

"உன்ன நல்ல டாக்டர்கிட்ட காட்டணும்" என்றான் பாண்டியன்.

"வா" என்று எழுந்தேன்.

"எங்க?"

"நல்ல டாக்டர்"

பாண்டியன் என்னையே பார்த்தபடி இருந்தான்.

"கிளம்பு"

"எல்லாரும் சொல்லுறது சரி"

"என்ன?"

"கொஞ்சம் முத்திடுச்சி"

நான் பெரிதாக ஒரு சிரிப்புச் சிரித்தேன்.

"நீ என்ன சொல்லுறேன்னு எனக்குத் தெரியுது. ஆனால் நீ சொல்லுற ஆள் நான் இல்லை. நீ தான் அது"

"சரி"

"அது கோழைகள், கையாலதவர்களின் செயல்"

"நீ புத்திசாலிதான்"

நான் சிரித்து அவன் முதுகில் ஒரு தட்டுத்தட்டினேன். எனக்கு முட்டாளிடம் கோபமே வருவதில்லை. ஒரு ஆள் முட்டாள் என்றால் சந்தோஷப்படக்கூடாது; அது மாதிரியே வருத்தப்படக்கூடாது. உலகத்தில் ஜீவிக்க அறிவு ஒன்று தேவை இல்லை. ஜீவிதம் அறிவு சம்பந்தப்பட்டது இல்லை. அது ஒரு இயற்கையான நிகழ்வு. அதன் மீது எதையும் கட்டக்கூடாது. அறிவு, அழகு மாதிரி. வேண்டாதது; தேவையற்றது. தொந்தரவு கொடுக்கக் கூடியது.

பாரிஜாதம் அழகு எததனைப்பேர்களுக்குத் தொந்தரவு கொடுத்தது. யோசித்துப் பார்த்தால், உடல் நடுங்கியது. பாவம். இளம் வயதில், செத்துப் போனாள். நான்தான் கொன்றேன். நான் கொன்ற முறையை விளக்கிச் சொன்னேன். சொல்கிறபோதே எனக்கு உற்சாகம் கூடிவிட்டது. உற்சாகந்தான் ஒரு காரியத்தை முடிக்கும். எவ்வளவிற்கு எவ்வளவு உற்சாக உள்ளதோ - அந்த அளவிற்குக் காரியம் விரைவில் முடியும்? பாரிஜாதம் கதையும் அப்படித்தான் முடிந்தது. ஒரு நிமிஷத்தில் அவள் செத்துப்போனாள். அதை இப்படித்தான் சொல்ல



வேண்டும். நான் கொன்றேன். அவளைக் கொள்ள வேண்டும் என்பதற்காக கொள்ளவில்லை. அவள் இருப்பு எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் கொன்றேன்.

ஒ - காவல் நிலையத்தில் நான் பாரிஜாதத்தைக் கொன்றது பற்றி சொன்னேன். நான் சொன்னதை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் என்னை ஏற இறங்க ஒருமுறை பார்த்தார்.

நான் சொல்வதை அவர் நம்பவில்லை என்பது தெரிந்தது. "சார், நான் தான் பாரிஜாதத்தைக் கொன்றேன்" என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னேன்.

"எதுக்கு?"

"கொல்லமென்றே கொன்றேன்"

"கொலையென்றால் என்னவென்று தெரியுமா?"

நான் தலையைச் சிலுப்பிக்கொண்டேன். இன்ஸ்பெக்டர் மூஞ்சியை ஒருமுறை பார்த்தேன். கறுத்து படர்ந்த மூஞ்சி. பெரிய மீசை. நன்றாகத் திருகிவிட்டுக் கொண்டிருந்தார். மார்பில் கே.ஆர். முருகவேல் என்ற பெயர் தொங்கிக்கொண்டிருந்தது. நான் நினைத்தது மாதிரி ஒன்றும் இல்லை. எல்லாம் எனக்கு எதிராக நடப்பது மாதிரி இருந்தது. அதில் முதல் விஷயம் என்னை யாரும் மதிக்கவில்லை. அப்புறம் நான் சொல்வதை யாரும் நம்பவில்லை. ஒரு ஆளை மிதிப்பது என்பது அவனை அவமதிப்பதுதான். அவமதிப்பு அவனை நிலைகுலைய வைத்துவிடுகிறது.

"கான்ஸ்டேபிள், டீ சொல்லு"

நான், இடது கை விரல்களை முறித்துக் கொண்டேன்.

இன்ஸ்பெக்டர் மேசை மீது இருந்த டெலிபோன்

அடித்தது. இரண்டாவது மணிக்கு இன்ஸ்பெக்டர் டெலிபோனை கையில் எடுத்தார். எனக்கு அது ஆச்சரியமாக இருந்தது.

நான் டெலிபோன் கண்டுபிடித்த அலக்சாண்டர் கிரகாம்பெல்லை நினைத்துக்கொண்டேன். மனிதர்களில் மாமனிதன். எத்தனை ஆச்சரியகரமான காரியம் செய்து இருக்கிறார். காதுகேளாதவர்கள், வாய்பேச முடியாதவர் களுக்கு ஏதாவது செய்யவேண்டுமென முயற்சி செய்தவர் தான் டெலிபோனைக் கண்டுபிடித்தார்.

"இன்ஸ்பெக்டர் டி.சி. மீட்டிங்கில் இருக்கார். வா ரெண்டு மணிநேரம் ஆகும்" என்றபடி போனை வைத்து விட்டு என்னைப் பார்த்தார்.

நான் ஒரு பொய்யன் முன்னே உட்கார்ந்து இருப்பதை உணர்ந்தேன். என் உடம்பு நடுங்கியது. கையை மேசைமீது அழுத்திக்கொண்டேன்.

அலக்சாண்டர் கிரகாம் பெல்லை மெய்பேச போனை கண்டுபிடித்தார்.

"அப்புறம்" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

எனக்குப் பேச்சு வரவில்லை. தலையசைத்தேன். பொய்யர்கள், அற்பர்கள் முன்னே நான் வாயடைத்து போவது தொடர்ந்து நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. நான், நானாக இல்லாமல் சிதைந்துபோய் விடுகிறேன். பொய் என்னை பதற அடித்துவிடுகிறது.

"நீ கிளம்பு"

நான் எழுந்து நின்றேன்.

"பித்துப் பிடிச்சிப்போய் ஏதாவது உளறிக்கிட்டு இங்க வந்த நிஜமாகவே புடிச்சி உள்ள தள்ளிடுவேன். ஜாக்கரதை" இன்ஸ்பெக்டர் குரல் மாறி என்னை



பயமுறுத்தியது. அதுவரையில் இருந்த ஆளில்லை. அது வேறு ஆள். எதுவும் செய்வான். அதிகாரம் உண்டு. பொய்யை நிஜமென்று போலீஸ் சாதித்துவிடும் என்று பாண்டியன் அடிக்கடி சொல்வான்.

"யாரிடமும் மாட்டிக் கொள்ளலாம். ஆனால் போலீஸ்கிட்ட மட்டும் மாட்டிக் கொள்ளக்கூடாது."

"அப்படியென்றால்"

"அப்படிதான். மேல ஒன்னும் கேட்காத பேப்பர் படி; டி.வி பார். உனக்கு எல்லாம் புரியும்."

நான் பதிலொன்றும் சொல்லாமல் பாண்டியனை பார்த்தபடி இருந்தேன். அவன் போலீஸால் புண்பட்டிருப்பான் என்று நினைக்கிறேன். சிலர் தனக்கு நேர்ந்ததை எல்லாம் கூட்டி சொன்னார்கள் இன்னும் சிலர் வாயையே திறக்க மாட்டார்கள். இன்னொரு கூட்டம் இருக்கிறது. அது கொஞ்சம் சொல்லிவிட்டு மற்றதை யெல்லாம் யூகத்திற்கு விட்டுவிடும். பாண்டியன் அதில் எங்கும் இல்லை. அவன் என்னோடு சேர்ந்து சேர்ந்து கெட்டுப்போய் விட்டான். அதை வெறுப்பில் சொல்ல வில்லை. அன்பில் சொல்கிறேன். எனக்கு நிஜமான அன்பன் பாண்டியன். என்னை, என்னைவிடவும் நன்றாக அறிந்தவன். அது மிகையல்ல. அலசி, அலசி பார்த்துவிட்டு சொல்கிறேன். யாரைப் பற்றியும் எதுவும் சொல்ல முடியாது.

மனைவி
அப்பா
அம்மா
அக்கா
அண்ணன்
தம்பி
தங்கை

- யாரைப்பற்றியும் திட்டமாக ஒன்றும் சொல்ல முடியாது. அதுதான் அவர்கள் பெருமை. என்ன சொன்னாலும், நான் அதில்லை என்று தள்ளிவிடுவார்கள். அது கஷ்டம் கொடுக்கும். சிரமப்படுத்தும். தூக்கத்தைத் துரத்தியடிக்கும். இரவில் எழுந்து உட்கார்ந்து கொண்டு யோசிக்க வைக்கும்.

உற்றார், உறவினர், நட்பு, சுற்றம் - என்று யார் யார் சூழ இருந்தாலும் நீ தனி. உன்னோடு அவர்கள் இல்லை. அவர்களோடு நீ கிடையாது. சேர்ந்து இருப்பதால் ஒன்றாக இருப்பதாக நினைக்கக்கூடாது. யாரும் யாரோடும் இல்லை. ஒவ்வொரு ஆணும் தனி; ஒவ்வொரு பெண்ணும் வேறு.

கணவன் மனைவி என்பதால் ஒன்று இல்லை. படுத்துக்கொள்ளும்போது ஒன்று; கட்டிப்புரளும்போது ஒன்று. சண்டைபோடும் போது ஒன்று. அப்புறம் எல்லா நேரத்திலும் தனிஆள். ஒட்டு உறவு இல்லாத ஆள். அதை இன்னொருவர் சொன்னால் கஷ்டமாக இருக்கும். தானே அறிந்துகொள்ளும்போது பிரமிப்பாக இருக்கும். நம்ப முடியாதது மாதிரி இருக்கும். உண்மை கொடுமையானது. பொய் சுகமானது. உண்மை சுடும்; பொய் மகிழ்ச்சி யளிக்கும். பொய் பேசுவதும் கேட்பதும் அதனால் தான் ஒவ்வொருவர்க்கும் பிடிக்கிறது.

பொய் சொன்னால், உன்னை யாரும் கோபிக்க மாட்டார்கள். தன் ஆள் என்று அடையாளங்கண்டு கூட்டத்தோடு கூட்டமாகச் சேர்த்துக்கொண்டு விடுவார்கள். சோறு போட்டு; பெண் கொடுத்து பாராட்டுவார்கள்.

உண்மை பேசினால் அடித்து விரட்டி விடுவார்கள். ஏனெனில் ஆபத்தானவன். பொது அமைதியைக் கொடுத்து விடுவான் என்று விரட்டியடித்து விடுவார்கள்.



நான், அடிக்கடி இன்ஸ்பெக்டரை நினைத்துக் கொள்கிறேன். அவன் கெட்டவன் கூட்டத்தில் நல்லவன். என்னை பயமுறுத்தி விரட்டியடித்து விட்டான்.

பாண்டியன் சொல்கிற கதைகளைக் கேட்டால், போலீஸ் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்பது தெரிந்தது. அதற்கு அதிகாரம் இருக்கிறது. உலகத்திலேயே கொடுமையானது அதிகாரம். அது கெட்டது. நல்லதை அழிப்பது; ஒழிப்பதுதான் அதன் ஒரே பணி.

நல்லவர்களை கருணையேதும் இல்லாமல் அதிகாரம் கொன்று இருக்கிறது. யார் யாரை அது பதற பதற அடித்து உயிரைப் பறித்து உள்ளது என்ற பட்டியல் எல்லாம் தேவை இல்லை. அது தீமை. தீமையில் இருந்து, நான் எப்படியோ தப்பிவிட்டேன்.

நான் வாழ்க்கையில் எத்தனையோ மனிதர்களைச் சந்தித்து இருக்கிறேன். அதில் எல்லோரும் சொல்வது மாதிரி, நல்லவர்கள் உண்டு. கெட்டவர்கள் உண்டு. நான் நல்லவர்கள், கெட்டவர்களை எத்தனை சதவீதம் என்று பிரித்துவைத்து இருக்கிறேன். அதுதான் முக்கியம். என் கணக்கில் நல்லவன் என்று வேடம் புனைந்துகொண்டு கெட்டவனாக இருக்கிறவன்; அதுபோல ஊரெல்லாம் கெட்டவனாகி - எனக்கு மட்டும் நல்லவனாக இருக்கிறவன் - என்று பிரித்து வைத்து இருக்கிறேன். என் பகுப்பாய்வு அது என்னவோ நம்ப முடியாதது மாதிரி இருக்கும். பழக்கந்தான் நம்பிக்கைக்கொள்ளவைக்கும். பழக்கம் இல்லாவிட்டால் எதுவும் பிடிபடாதது.

பழக்கம் பார்வையால் பழசாகிறது. பார்க்கப் பார்க்க அதுவே பழக்கமாகிறது. சித்திரமும் கை பழக்கம். பேசப் பேச மொழி நிலை நிறுத்தப்படுகிறது. எழுத்தும் அப்படித்தான். எது திருப்பத்திருப்ப சொல்லப்படுகிறதோ - பேசப் படுகிறதோ அதுவே பழக்கமாகிறது.

அழகு அப்படித்தான். முதல் பார்வைக்கு மனத்திற்குள் சொல்லாதது. பின்னால் பிடிபடுகிறது. எதுவும் மெதுவாக நிகழ்கிறது. அதனால்தான் பின்னால் பிடிபடுவது இல்லை. இடியின் சப்தத்தைப் பிடித்து வைத்துக்கொள்ள முடியவில்லை. அறிந்ததில் இருந்து அறியாததை அறிந்துகொள்வதுதான் பழக்கம்.

நான் பழக்கம், வழக்கம் என்பதை எல்லாம் புறந்தள்ளியவன். மொழி, எழுத்து, சித்திரம் என்று எதுவும் இல்லாமல் யோசிக்கிறவன். யோசித்துக்கொண்டு வருகிறவன். சொன்னால் நம்புவது சிரமமாக இருக்கும். அதற்காகச் சொல்லாமல் இருக்க முடியாது. மொழி சார்ந்து எழுத்தைப் பின்பற்றி யோசிக்கிற ஆளில்லை. கணிதம், குறியீடு, வர்ணம், நிறம் - எதுவும் எனக்குத் தேவை இல்லை. பேச்சென்று ஒன்று இல்லாமல்; பேசுவேன். எழுத்து இல்லாமல் எழுதுவேன். குறியீடு இல்லாமல் கணக்குப் போடுவேன். வர்ணம் இல்லாமல் ஓவியம் தீட்டுவேன். சுவர் இல்லாமல் வானத்தில் மகத்தான சித்திரம் தீட்டுவேன். எந்த உபகரணம், கருவி இல்லாமலும் நான் செயல்படுவேன். எனவே மொழி இல்லாமல் பேசுவேன். எழுத்து என்பதே இல்லாமல் எழுதுவேன். என் எழுத்து பிராமி இல்லை, ரோமன் கிடையாது. கரோஷ்டி இல்லை. தாமிழி, திராளவிடி இல்லை. வட்டெழுத்து, கிரந்தம் இல்லை. மனித கண்டுபிடிப்புகள் இல்லாமல் நான் செயல்படுவேன். நான் சொல்வது என்னவோ நம்ப முடியாதது மாதிரி இருக்கும். நம்புவது, நம்பாமல் இருப்பது எனக்கு முக்கியமில்லை.

நான் நம்புகிறேன். நான் செய்வதைச் சொல்கிறேன் அதுதான் முக்கியம். முதல் மனிதன் இன்னொருவன் சொன்னதைச் சொல்வது இல்லை. அவன் திருப்தி சொல்கிற ஆளில்லை. அதை அறிய வேண்டும். அறிவது



அபூர்வமான அனுபவம். அறிந்து கொண்டுவிட்டேன் என்பதைப் புரிந்துகொள்ள ஒரு புத்தி வேண்டும்.

பலருக்கு புத்தி கிடையாது. சொந்த புத்தி என்பது இல்லவே இல்லை. உலகம் புத்தி இல்லாதவர்களாலும், மந்த புத்தி ஆள்களாலும் நிரம்பி கிடக்கிறது. அதுதான் காரணம். அதில் நான் இல்லை என்பது மட்டுமல்ல; இல்லை என்பதை ஒவ்வொரு கணமும் உணர்ந்து கொண்டு இருக்கிறேன். உணர்ந்ததை உணர்ந்த விதமாகச் சொல்கிறேன்.

"நீ பெரிய புத்திசாலிதான். உன்ன மாதிரி புத்திசாலி ஒருத்தனும் இல்ல. அது தெரியுது. நீ சொல்லித்தான் தெரிந்துக்கொள்ளணும் என்று இல்லை" என்றான் பாண்டியன்.

"பாண்டி, நான் உனக்காக இல்லை எனக்காகவே சிந்திக்கிறேன். எல்லோர்க்காகவும் பேசுகிறேன்."

"எங்களுக்கு யோசிக்கிற ஆள், சிந்திக்கிற ஆளையெல்லாம் பிடிக்காது. ஏதாவது காரணம் காட்டி தீர்த்து விடுவோம்."

"இது ரொம்ப நல்லா இருக்குது"

"என் வருத்தமெல்லாம், உனக்கு ஒன்னும் தெரியலீயேன்னுதான். எப்ப நீ உலகத்தைத் தெரிஞ்சிக்கப் போற."

"அப்படியா?"

"நான் உண்மையா சொல்லுறேன். யாரும் உன்கிட்ட உண்மை பேசமாட்டான். நீ பெரிய சிக்கல்ல மாட்டிக்கப் போற. அப்ப ஒருத்தனும் உதவிக்கு வரமாட்டான்."

நான் அவனையே பார்த்தபடி இருந்தேன்.

"நீ டாக்டரைப் பார்க்கணும். சரியில்லாம இருக்கற"

நான் ஒரு சிரிப்புச் சிரித்தேன்.

"இப்படி கஷ்டப்படுற ஆள் உலகத்தில நீ முதலும் இல்ல கடைசியும் இல்லை"

பாண்டியன் தத்துவஞானி மாதிரி பேசினான். எனக்கு அதுவே ஆச்சரியமாக இருந்தது. என்னோடு பேசி; பழகி ஏதோ கொஞ்சம் கற்றுக்கொண்டு இருக்கிறான். என்னிடம் கற்றதை என்னிடமே திருப்பிக்கொடுக்கிறான். அதில் அவனுக்கு வெட்கமோ, தயக்கமோ இல்லை. அந்த விசித்திரத்தை நான் ரொம்ப இயல்பாகப் பார்த்தபடி இருந்தேன். மனிதனைப் பற்றிய என் மதிப்பீடு என்னவோ அதனோடே அவன் சேர்ந்து போனான். அவன் மீது எனக்குக் கோபமோ, வருத்தமோ வரவில்லை. அவன் அவனாக இருக்கிறான். நான் நானாக இருக்கிறேன். இருவரும் ஒன்றில்லை என்பது மட்டுமல்ல வேறு வேறு ஆள். வேறு வேறாக இருப்பதால் மட்டுமே ஒன்றாகச் சேர்ந்து இருக்கிறோம்.

அடுத்த வாரம் எனக்கு காய்ச்சல் கண்டுவிட்டது. காய்ச்சல் என்றால் அப்படியொரு காய்ச்சல். குளிர்காய்ச்சல். குளிர்வது மாதிரியும் இருந்தது. உடம்பில் இருந்து நெருப்பு பறப்பது மாதிரியும் இருந்தது. ஒரு போர்வையை எடுத்து போர்த்திக்கொண்டு இண்டர்நெட்டில் தண்ணீர் தேவையைப் பற்றி படித்துக்கொண்டிருந்தேன். தண்ணீர்தான் உலகம். எங்கு தண்ணீரும் காற்றும் இருக்கிறதோ அங்கே உயிர் வாழ்க்கை உண்டு. புழு பூச்சிகள் நெளியும்; புல் பூண்டு முளைக்கும் அது பாறையாக - குகையாக - எப்படி இருந்தாலும் சரி. கொஞ்சம் வெளிச்சம் பட்டால் நன்றாக பச்சைப்பசேல் என்று வளரும்.



இப்படியாகத் தொடங்கிய தண்ணீர் கட்டுரை தண்ணீர் பஞ்சத்தையும் - தண்ணீர்க்காக நடைபெறும் சண்டைகளையும் பற்றி விவரித்துக்கொண்டே சென்றது. அதைப் படிக்கிறபோது 'நீரின்றி அமையாது உலகு' என்பதையும் சேர்த்துக்கொண்டேன்.

படிப்பு என்பதே அதுதான். பெற்றதை கற்பதோடு சேர்த்துக் கொள்கிறது. உரசி பார்க்கிறது. விமர்சனம் செய்கிறது.

வாழ்க்கைக்கு விமர்சனம் அவசியம். இதுதான் வாழ்க்கையை உயிர்த்தன்மையுடன் வைத்துக்கொள்கிறது. ஆனால் விமர்சனம் யார்க்கும் மகிழ்ச்சி அளிப்பது இல்லை. விமர்சனம் வேண்டும் என்று சொல்கிற ஒவ்வொரு ஆணும் என்னைப் பாராட்டு - அடுத்தவனை நிந்தித்துக்கொண்டே இரு என்றுதான் சொல்கிறான். அதை வெட்கப்பட்டுக்கொண்டு வாயால் சொல்கிறவன் குறைவு. மனசு முழுவதும் ஆசையோடு இருக்கிறவன்தான் அதிகம். எப்படி ஆனாலும் மனித ஆசை என்பது பேராசை. அதனை எதனாலும் திருப்திபடுத்த முடியாது.

என் அண்ணன் பரமசிவம்தான் அதற்கு சரியான எடுத்துக்காட்டு. ஏன்? எதற்கு என்ற கேள்வியே அவனுக்குக் கிடையாது. அவனுக்கு ஆசைப்படத்தான் தெரியும். ஆசையால் அடைவது ஒன்றுமில்லை என்றாலும் அவன் ஆசைப்பட்டுக் கொண்டே இருப்பான்.

வாழ்க்கையில் இருந்து ஆசையைப் பிரிக்க முடியாது. மனிதன் என்றால் ஆசை; மனுஷி என்றால் பேராசை என்று நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. அதில் பொய்யும் உண்டு என்பது மாதிரி மெய்யும் உண்டு. ஆசை என்பது பேராசை என்பதும் தனித்தனியானது இல்லை. எல்லைக்கோடு துலாபாரம் எதும் கிடையாது. ஆசை

எடைபோட முடியாது. அதை எந்த எடைக்கல்லையும் கொண்டு மதிப்பிடமுடியாது. அதுதான் உண்மை.

பாண்டியன் என் மூஞ்சியைப் பார்த்துவிட்டு கலவரமுற்றுப் போய்விட்டான். நெற்றி, மார்பு, கையை எல்லாம் தொட்டுப்பார்த்துவிட்டு, "ரொம்ப காய்ச்சல்" என்றான்.

எனக்கு கொஞ்சம தெரிந்தது. உடம்பு என்று ஒன்று இருந்தால் நோய் வரத்தான் செய்யும். நோயும் உடம்பு பிரிக்க முடியாது. அதனால் நான் நோயைப்பெரிது செய்வதில்லை. நோயை வெல்ல - அதை உதாசீனப்படுத்த வேண்டும். அப்புறம், உடம்பிற்கே நோயை குணப்படுத்தும் சக்தி இருக்கிறது. அது தன்னைத்தானே சரிபடுத்திக் கொள்ளும் என்பது என் நம்பிக்கை. அதனால் நான் அடிக்கடி டாக்டரிடம் ஓடுகிற ஆளில்லை. என் உடம்பு பற்றி எனக்கு அதிகமாகத் தெரியும். என்னைப் பற்றி என் உடம்பிற்குத் தெரியும்.

என்னை மாதிரி மற்றவர்கள் இல்லை. உடம்பு என்றால் டாக்டர் கவனிக்கவேண்டியது என்று பலர் நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். அதில் முதல் ஆள் பாண்டியன். இருமல் வந்தால், காது வலித்தால் உடனே டாக்டரைப் பார்க்கக் கிளம்பி விடுவான். பயம் முதல் காரணம். இரண்டாவது காரணம் மரணம். பயம் மரணத்தில் இருந்துதான் வருகிறது.

பாண்டியன் டாக்டரைப் பார்க்கப் புறப்படுகிற அவசரத்தைப் பார்த்துவிட்டு நான் சிரிப்பேன்.

"நம்ப உடம்பு பற்றி நமக்கு என்ன தெரியும்?" என்று கிளம்பிவிடுவான். அவனுக்கு டாக்டர்தான் கண் கண்ட தெய்வம். எனக்கு டாக்டர்மீது மரியாதை உண்டு. ஆனால் டாக்டர் உடம்பிற்கு அதிபதி என்று நம்புவதில்லை. நோய் வரும். போகும். உடம்பு இருக்கிறவரையில் நோயுண்டு. அதுதான் என் கொள்கை. நோயை மனத்தால் போக்க முடியும் என்பது என் நம்பிக்கை.



"உன் நம்பிக்கை உன்னோடு. என் நம்பிக்கை என்னோடு" என்பது பாண்டியன்.

என் நம்பிக்கையில் தீவிரமாக இருப்பதுபோல இன்னொருவன் நம்பிக்கையையும் மதிக்கிற ஆள் நான். அதுலே என்னையும் மற்றவர்களும் ஒன்றாகச் சேர்த்து இருந்தது.

பாண்டியன் என்னை டாக்டரிடம் அழைத்துக் கொண்டு சென்றான். அரைமணிநேரம் காத்து இருந்தோம். நான் எங்கு போனாலும், முன்னே ஓட மாட்டேன். காத்து இருப்பேன். எப்பொழுது அழைக்கிறார்களோ அப்பொழுதுதான் எழுந்துபோவேன். அவர்கள் ஒழுங்கு முறையை மதிக்கவேண்டும்.

டாக்டர் என்னை பத்து நிமிடம் சோதித்துப் பார்த்தார். நான் அவர்கேட்ட ஒவ்வொரு கேள்விக்கும் பதில் சொன்னேன். கண், காதை சோதித்தார். பசி பற்றி விசாரித்தார். ஒரு கணம் யோசித்தார்.

"நீங்க பயப்படவேணாம். இது சிக்குன்னியா ஜீரம் இல்ல. வைரஸ் ஃபீவர்"

"நான் பயப்படுற ஆளில்லை, டாக்டர்"

"ரொம்ப பயப்படுறவங்க எல்லாம் இப்படித்தான் சொல்வாங்க"

"நான் நிஜமாவே பயப்படுற ஆளில்லை டாக்டர்"

"உங்களுக்காக நான் பயப்படுறேன்"

பேச்சு திசைமாறி போனது. டாக்டர் பயமுறுத்துகிற ஆளாக இருந்தான். எனக்கு அது எரிச்சல் தந்தது. டாக்டர்

பயமுறுத்துகிற ஆள். வக்கில் மிரட்டுகிற ஆள். இருவரும் அடிப்படையில் பயமுறுத்தி பணம் பறிக்கிற ஆள்கள். அதில் ஆளுக்கு ஆள் அளவில் வித்தியாசப்படலாம். ஆனால் அடிப்படையில் ஒன்றுதான். எல்லாம் ஒரே கூட்டம். ஆனால் தனித்தனியாக இருக்கிறார்கள்.

டாக்டர் ஒரு சீட்டை எழுதி பாண்டியன் கையில் கொடுத்தார். என்னை பயமுறுத்துவதைவிட, அவனை பயமுறுத்துவது சுலபம் என்று கண்டறிந்து விட்டார். அதுதான் தொழில் திறமை.

"பாண்டியன். சார்க்கு ரெண்டு நாளைக்கு மருந்து எழுதியிருக்கிறேன். சாப்பிட்டு பார்க்கலாம். ஜீரம் இருந்தால் அட்மிட் பண்ணிப் பார்க்கலாம்."

"சரி சார்" பாண்டியன் நூறு ரூபாய் எடுத்துக் கொண்டான்.

"நூற்றியம்பது ரூபாய்"

அவன் பையில் கைவிட்டு ஐம்பது ரூபாய் நோட்டை எடுத்துக்கொடுத்தான்.

நான் எழுந்தேன். தலையைச் சிலுப்பிக்கொண்டு வெளியில் வந்தேன்.

டாக்டர் முன்னே உட்கார்ந்து இருந்ததே எனக்கு நோயைக் கொண்டு வந்துவிட்டது. வெளியில் டாக்டரைப் பார்க்க ஒருகூட்டம் உட்கார்ந்து இருந்தது. அந்த மூஞ்சியை எல்லாம் ஒருமுறை பார்த்தேன். பாவமாக இருந்தது.

"நல்ல டாக்டர். ரொம்ப கைராசி" என்றான் பாண்டியன் என் பக்கமாக வந்து.

"கைராசி டாக்டர் என்றால் முட்டாள் டாக்டர். வைத்தியம் தெரியாதவன்" என்றேன்.



"நீ கிறுக்கு. உன் கிட்ட பேச முடியாது" என்றபடி மருந்து வாங்கச் சொன்றான்.

மனிதன் நோய்கள் மருந்தால் குணமாவதில்லை. மனித உடம்பே பலவிதமான நோய்களை குணமாக்கி விடுகிறது. நோய் வருவதும் உடம்பால்; குணம் ஆவதும் உடம்பால். தன் ஆற்றலால் நோயை உடம்பு குணமாக்கிக் கொள்கிறது. நெடுங்காலமாக நடப்பது அதுதான். பலர்க்கு உடம்பு பற்றி தெரிவதில்லை. எனக்குத் தெரிகிறது. காய்ச்சல் வரும்; அப்புறம் வந்தது போல செல்லும். வருவதும் போவதும் வழக்கம். எதுவும் வந்து விட்டதே என்று பதறக்கூடாது; போய்விட்டதே என்று ஆனந்தப்படக்கூடாது. உடம்பு என்று இருக்கிறவரையில் நோயென்று ஒன்று இருந்து கொண்டுதான் இருக்கும்.

பாண்டியன் மருந்தும், ரொட்டியும் வாங்கிக் கொண்டு வந்தான். நான் அவனையே பார்த்துக்கொண்டு இருந்தேன்.

"ரொட்டிதான் சாப்பாடு."

நான் தலையசைத்தேன்.

எனக்குச் சாப்பாட்டில் பிடித்தது பிடிக்காது எல்லாம் கிடையாது. எல்லாம் பிடிக்கும். பாரிஜாதம் மிளகு ரசம் வைத்தால் ரொம்ப பிடிக்கும். மிளகு நறுமண பொருள் களிலேயே அபூர்வமானது. அற்புதமான சுவை கொண்டது. அதன் பெருமை எத்தனையோ கடல் கடந்து சென்று உள்ளது. தொலைதூரத்து ஆள்களை எல்லாம் கவர்ந்து வைத்து உள்ளது. யவனர்கள், பொன்னைக் கொடுத்து மிளகு வாங்கிக்கொண்டு போய் இருக்கிறார்கள். மிளகும் பொன்னும் ஒன்றுதான். என்னைக் கேட்டால், மிளகுதான் உயர்ந்தது என்பேன். ஏனெனில் நாக்கால் மிளகை சுவைக்கலாம். ருசியை அறியலாம். தங்கத்தைத் தின்ன

முடியாது. அது ஒரு தாது பொருள். பார்த்து அனுபவிக்கலாம். அணிந்து மகிழலாம். பொன் காசு கொடுத்து விட்டு மிளகு வாங்கிச்சென்றார்கள். பொன்னோடு வந்து கறியொடு பெயரும் தங்கக்காசுக்கு மாற்றுப் பொருள் மிளகு.

மிளகு கொடுத்து தங்கக்காசு வாங்கியவர்கள் அதையெல்லாம் கோர்த்து பிரியமான பெண்களுக்கு அணிந்து மகிழ்ந்தார்கள். யவனர்கள் நாவாய் பொன்னோடு வந்து கறியோடு பெயர்ந்தது.

உயர்ந்தது; அபூர்வமான என்றால் பதுக்கி வைத்துக் கொள்வது இல்லை. பிரியமானவர்களுக்கு கொடுத்து மகிழ்வது. ஈத்து உவப்பது. ஔவை நெல்லியை அதியமானுக்கு ஈந்தாள்.

எனக்கு மிருளாளணி ஒரு பேனா கொடுத்தாள். நான் அவளையே பார்த்துக்கொண்டிருந்தேன். வெட்வெட் பையில் இருந்து நீலநிற பேனாவை எடுத்து முத்தமிட்டு விட்டு என்னிடம் நீட்டினாள். யார் என்ன கொடுத்தாலும் நான் உடனே வாங்கிக்கொள்வேன். ஈகை பெரும் குணம். மனிதன் அடிப்படையில் பெருங்குணத்தான் இல்லை. சிறுகுணம் கொண்டவன். எல்லாம் தனக்கென்று, தன்னோடு இருக்கவேண்டுமென்று ஆசை கொண்டவன். அதை வைத்துக்கொள்ள தகுதி உண்டா? திறமை இருக்கிறதா? தனக்கு உரியதா என்று எல்லாம் பார்க்க மாட்டான். அது எனக்குத் தெரியும்.

"அற்புதமான பேனா. பதினொரு ஆண்டுகளாக வைத்துக்கொண்டு இருக்கிறேன். முதன் முதலான சதுரங்கப் போட்டியில் ஜெயித்தபோது பரிசா கிடைத்தது. என் பரிசாகக் கொடுக்கிறேன்."

நான் பிரியமானவள் கொடுத்த பேனாவை பணிந்து



வாங்கிக்கொண்டேன். அவள் பேனாவை கொடுக்கவில்லை. தன்னையே கொடுக்கிறாள். அதை நான் அறிந்து கொண்டது மாதிரி அவளும் அறிந்து கொண்டு இருந்தாள். நான் அவளை மயக்கத்தின் விளைவு. அவளிடம் தோற்றதால் வெற்றி பெற்றுவிட்டேன். தோல்வியே வெற்றி. அதுபற்றி அதிகம் பேசக்கூடாது.

நான் பேசுகிற ஆளில்லை.

பேச்சு பெரியதே இல்லை. சொல்லால் எதையும் வெல்ல முடியாது. ஆனால் பேச்சு சண்டை மூட்டும். பகையை தூண்டும். தலையை உருளவைக்கும். ஆகையால் சிநேகிதிகள் மத்தியில் மௌனமாகிவிடுவேன். அது பெரும் வெற்றி.

ஆட்டோவில் வரும்போது கண்களை மூடி கொண்டேன். போர்வையை இழுத்து நன்றாகப் போர்த்திக் கொண்டேன்.

"உடம்பு எல்லாம் வலிக்குதா. சிக்குன் குனியாவோன்னு பயந்தேன். இல்லையென்னு டாக்டர் சொல்லிட்டார். இப்படித்தாம் நிம்மதி" என்றான் பாண்டியன்.

"மலேரியா, டைபாயிடு. சிக்குன் குனியா" என்று முணுமுணுத்தேன்.

"என்ன?" என்றபடி பாண்டியன் என் இடது கையைப் பிடித்தான்.

என்னைப்பற்றி அவனுக்குப் பயம். பயப்பட அவசியம் இல்லையென்றாலும் பயப்பட்டான். எங்கு அன்பு உள்ளதோ, பிரியம் அலைமோதுகிறதோ அங்கே பயமும் வந்துவிடுகிறது. அதற்குக் காரணம் நான் தான். நானே அவன் பிரியத்திற்கு வித்திட்டு வளர்த்து

இருக்கிறேன். பலர்க்கு அது தெரியாது. எனக்குத் தெரிகிறது. அறிவால் அறிந்து வைத்துக்கொண்டு இருக்கிறேன். அதுதான் நான். அதன் விளைவு பற்றி யாரிடமும் பேசக்கூடாது.

நான், என்னிடம் சொல்லிக்கொள்வது. நான் சொல்வதை மனசு கேட்பது இல்லை; நாக்கு கேட்பது இல்லை. பேசுவதில் எனக்கு பேராசை இருக்கிறது. பேச்சே, பெருமையென நம்புகிறேன். உண்மையில் அப்படி இல்லை. அது எதிர்.

பாண்டியன் என்னை கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு போனான். நான் நோயுற்று இருக்கிறேன். என்பதை எனக்கே புரியவைத்துக் கொண்டிருந்தேன். எனக்கு அது பிடிக்கவில்லை. பலநேரத்தில் பிடிக்கிறது பிடிக்கவில்லை என்பது தெரிகிறது.

நான் சொல்லால்தான் மாளிகை கட்டுகிறேன். அதுமகத்தான மாளிகை. இன்னொருவன் கட்டி முடியாதது. எனது மதியாலும், கற்பனை வளத்தாலும் கட்டப்பட்டது. அதன் அழகைக் காண ஆயிரம் கண் வேண்டும். காணக்காண களிப்புக் கொடுக்கக்கூடியது. ஆயிரம் தச்சர்கூடி கட்டிய அதிஅற்புதமானது என்பது போல பெயர் பெற்றது. கண்ணாடி மாளிகையோ அரக்கு மாளிகையோ கிடையாது. சொற்களால் வடிவமைக்கப் பட்டது. அதில் சொடை சொத்தையெல்லாம் கிடையாது. இணையில்லாத சொற்களைக் கொண்டு எழில்பொங்க நிர்மாணிக்கப்பட்டது.

சொல்லுக்கு வலிமையுண்டு என்பதை நான் சொல்கிறபோதுதான் அறிகிறார்கள். அது என் திறமை. வலிமை. அறிவதால் என்னிடம் இருந்து சக்தி பெறுகிறார்கள்.



நான் வாழ்க்கையை நன்கு அறிந்தவன் - அதாவது கண்களுக்கு முன்னால் நடப்பதை வைத்துக்கொண்டு அதன் காரண காரியங்களைச் சொல்லிவிடுவேன். எப்படி தெரிகிறது என்றால், எனக்கு வேடிக்கையாக இருக்கும். அதற்குப் பொருள் தெரியவில்லை என்பது இல்லை. தெரிகிறது என்பதுதான். சூரியன் தெரிவது மாதிரி; கடல் தெரிவது மாதிரி - எனக்கு எல்லாம் தெரிகிறது.

நான் எதையும் தெரிந்துகொள்ள அதிகப் பிரயாசைப் படமாட்டேன். எனக்கு எது தெரியவேண்டுமோ அது தெரிந்துவிடும். ஒன்று எனக்குத் தெரியவில்லையென்றால் அப்பொழுது அவசியமில்லை. எப்பொழுது எது தெரிய வேண்டுமோ அப்பொழுது தெரிந்துவிடும்.

எதுபற்றியும் நான் மனசை அலட்டிக்கொள்ள மாட்டேன். அதுதான் எனக்கு ஆசான். நண்பன். அது சொல்வதை காதுகொடுத்து கேட்பேன். மனசு எப்பொழுதும் என்னிடம் பேசும். நான் அதனிடம் பேசுவேன். நாங்கள் இரண்டு பேரும் சிலநேரம் இன்னொருவர் கேட்க முடியாத தொனியில் பேசிக் கொள்ளுவோம்; பலநேரங்களில் சப்தமாகப் பேசிக் கொள்ளுவோம்.

"தியாகு, தஞ்சாவூர் போகலாமா?"

"தஞ்சாவூர் என்று எதற்குச் சொல்லுற. ராஜ குமாரியைப் பார்க்க என்று சொல்"

"தஞ்சாவூர் போய் பெருவுடையாரை தரிசனம் பண்ணிவிட்டு, சரஸ்வதி மகாலுக்குப் போய் கஜசாஸ்திரம் படித்துவிட்டு அப்புறம் மாலையில் ராஜகுமாரி... அவள் வீட்டில் வஞ்சிரம் சாப்பிடலாம். நாக்குச் செத்துக் கிடக்கிறது"

"நீ முடிவு பண்ணிட்ட"

"தஞ்சாவூர் பிரகாஷ் மூன்று மாதமாகக் கூப்பிட்டுக் கொண்டே இருக்கிறான். அவனிடம் தமிழ் மொழியில் முதன் முதலாக அச்சான தம்பிரான் வணக்கம் புத்தகத்தின் பிரதியொன்று இருக்கிறதாம். நேரில் வந்தால் தான் காட்டுவானாம். தபாலில் அனுப்பு என்றேன். அதெல்லாம் முடியாது. நீ நேரில் வா என்று எழுதி விட்டான்"

"சரி, புறப்படு"

"நீ சொன்னால் தான்"

"நான் உத்தரவு கொடுப்பது இல்லை"

"நான் உத்தரவு வாங்கிக் கொள்கிறேன்"

"தாத்தா இப்படித்தான் தருமபுரம் பண்டார சன்னதியிடம் பேசுவார்"

"நான் தாத்தா இல்லை. தருமபுரம் பண்டார சன்னதியை நான் பார்த்தது இல்லை"

"அது அவசியம் இல்லை. பார்ப்பது, படிப்பது கேட்பது; சொல்வது - எதனாலும் எதையும் பெறமுடியாது. உன்னிடம் தாத்தா தியாகராஜ முதலியார் இருக்கிறார். அவர் இல்லாமல் நீ இல்லை."

"தியாகு, நீ ரொம்ப இடும்பு பண்ணுற"

அம்மா, சின்ன வயதில் இடும்பு பண்ணாதே என்று சொல்லும், அம்மா அவ்வையார். இடும்பைகூர் என் வயிறே உன்னோடு வாழ்தல் அரிது என்று பாடியுள்ளார்.

சாப்பாடுதான் மனிதனை ஜீவிக்க வைக்கிறது. ஒவ்வொரு வேளையும் தவறால் சாப்பிடவேண்டும். இடையிடையே நீர் பருகவேண்டும். வாழ்க்கையென்றால் பசியாறவேண்டும். வயிறு நிறைந்தால்தான் வாழ்க்கை வளம் பெறும். பசி கொண்டவன் மிருகமாகி விடுறான்.



மானம் மரியாதை எல்லாவற்றையும் இழந்து இழிபிறவியாகி விடுகிறான். அது ஒவ்வொரு மனிதனையும் பாதிக்கிறது. அதில் பெண்கள்தான் அதிகம்.

மணிமேகலைதான் அதில் முக்கியம். அட்சய பாத்திரம் எடுத்துக்கொண்டு அமுதுபடைக்கச் சென்றாள். கோவில் தோறும் அன்னதானம். வீடுகளில் கல்யாண விருந்து சாப்பாடுதான் வாழ்க்கை. வீடு என்பதே விருந்து கூடம். எங்கள் வீட்டில் அடுப்பு எரிந்துகொண்டே இருக்கும். அது அணைந்து நான் பார்த்ததில்லை.

அத்தை என்னை அழைத்துக்கொண்டு தைப்பூசத்திற்கு வடலூர்க்குச் சென்று ராமலிங்கசுவாமி மடத்தில் அன்னதானம் செய்யும். அத்தை இருந்தவரையில் அது தொடர்ந்து நடைபெற்றது. யார் சாப்பிடுகிறார்கள்; யார் போடுகிறார்கள் என்பது முக்கியமல்ல. பசித்தவர்கள் புசிக்கவேண்டும். பசியோடு இருப்பவன் வெறிநாய். அவன் என்ன செய்வான்; ஏது பேசுவான் என்று கணிக்க முடியாது. பசி நல்லவனை பொல்லாதவனாக்கிவிடும். பொல்லாதவனை கொலைக்காரனாக்கிவிடும்.

நான் பசியாறினேன். இரண்டு துண்டு ரொட்டியும் பாலும் பருகினேன். வயிறு நிறைந்தது மாதிரி இருந்தது. அப்புறம் மனம் நிறைந்தது. நான் சாப்பிட்டதும், பாண்டியன் திருப்தி அடைந்தான்.

## 11

நான் கங்கைக்கரை தபோவனத்தில் ஒரு மூலையில் உட்கார்ந்து பகவத்கீதை உபதேசம் கேட்டுக் கொண்டிருந்தேன்.

கேட்பது சுகம். செவிபடைத்ததின் அற்புதம். கற்றிலன் ஆயினும் கேட்க. பார்க்காமல் கேட்கலாம். அதுதான் கேட்பதில் உள்ள சுகம். தொலைவில் பேசுவதை அருகில் கேட்க பெல் டெலிபோன் வழியாக ஏற்பாடு செய்துவிட்டார். நானும், பாண்டியனும் அடிக்கடி பேசிக் கொள்வோம். அவனுக்குப் பேசுவதில் சுகம்; எனக்குக் கேட்பதில் விருப்பம். டெலிபோன் இரண்டையும் பூர்த்தி செய்கிறது. ஆனால் அது மனிதன் இல்லை. மனிதன் அளவிற்கு மதி பெற்றதும் இல்லை. கண்டுபிடிப்பு என்பது எல்லாம் சுயமான அறிவு இல்லாதது. அதுவே அதன் பலம்.

அறிவுதான் சந்தோஷத்திற்கும், துயரத்திற்கும் காரணம். அறிவை தொலைக்காத வரையில் எதையும் அடையமுடியாது. அறிவு சின்ன மூளையில் குடியிருக்கும் அற்புதம். அறிய அறிய வியப்பில் ஆழ்த்தக்கூடியது.

அர்ச்சுனன் தன் அறிவால் நிலைகுலைந்து போனான். அறிவு தனியானது இல்லை. அது அன்பு, பாசம், வீரம், கோழைத்தனம் - என்று எத்தனை எத்தனையோ அம்சங்களோடு சம்பந்தப்பட்டு இருப்பது. அதனால் ஒரு நேரத்தில் அது மகிழ்ச்சி அளிக்கிறது. இன்னொரு நேரத்தில் சங்கடப்படுத்திவிடுகிறது.

நான் அறிவை மட்டும் நம்புகிறஆள். அறிவால்தான் நான் ஜீவித்துக்கொண்டு இருக்கிறேன்.

கீதா உபதேசம் முடிந்தது. நான் கண்களைத் திறந்து பார்த்தேன். மூன்று இளம் பெண்கள் ஒரு தொன்னையில் பூரியும், கேசரியும் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். நான் தரையில் கையூன்றி எழுந்தேன். ஒரு பெண் அவசர



அவசரமாக எனபக்கம் ஓடிவந்து, "சுவாமி" என்று ஒரு தொன்னையை நீட்டினாள்.

இரண்டு பூரி; கொஞ்சம் கேசரி. நான் பணிவோடு வாங்கிக்கொண்டேன். அன்னலட்சுமியை நான் தொழுகிற ஆள். சாப்பாட்டிற்கு மிஞ்சி எதுவும் கிடையாது. அறிவு என்பதே சாப்பாட்டை அடைவதுதான். மனித இனத்தின் முழு அறிவு, ஆற்றல் எல்லாம் சமைப்பதிலும், சாப்பிடுவதிலுந்தான் சென்று இருக்கிறது. நான் சாப்பாட்டுப் பிரியன். ஆனர்ல் கண்டதையெல்லாம் தின்கிறவன் இல்லை. என் சாப்பாடு என் தாத்தா வழியில் வந்தது. தியாகராஜ முதலியார் வீட்டில் இட்லி, இடியாப்பம், புட்டு - எல்லாம் பிரசித்திபெற்றது. அப்படியே காபி. அத்தை அன்றைக்கு வேண்டிய காபித் தூளை அரைத்து காபிபோடும். வீட்டில் இரண்டு பசுமாடு. எப்பொழுதும் பால் இருக்கம். பாலும் தயிரும் முதலியார் வீட்டில் இருந்து நான்கு வீடுகளுக்குப்போகும்.

திருவையாறு தியாகையர் உற்சவத்திற்கு வரும் நன்னிலம் முருகையாபிள்ளை, கோனேரிராஜபுரம் ராஜப்பாபிள்ளை எங்கள் வீட்டில்தான் சாப்பிடுவார்கள்.

வீட்டிற்குப் பின்னால் பெரிய காய்கறி தோட்டம். ஏற்றம் போட்டு தண்ணீர் பாய்ச்சுவார்கள். ராமசாமி படையாச்சிதான் தோட்டவேலை. நீலநிறதுண்டை முண்டாசாகக் கட்டிக்கொண்டு தோட்டத்தில் நிற்பார். கத்தரி, வெண்டை செடிகளுக்கு இடையில் பறக்கும் பட்டாம் பூச்சிகளைப் பிடிக்க நான் தாவித்தாவி ஓடுவேன்.

"தம்பி, பத்ரம் பத்ரம்" என்று என் பின்னால் ஓடி வருவார் படையாச்சி.

தோட்டத்தின் முடிவில் ராஜவாய்க்கால். வாய்க்கால் கரையில் பனைமரங்கள். கோடைகாலத்தில் எனக்கு நுங்கு வெட்டிகொண்டு வந்து கொடுப்பார்.

நான் வாழ்க்கையில் எதையும் தேடிப்போனதில்லை. எப்பொழுது எது தேவையோ அது வந்துவிடும். அதில் சாப்பாட்டில் இருந்து எல்லாம் அடங்கும். காரணம் நான் எதற்கும் அலைகிறவன் இல்லை. என்னுடையது எனக்குத்தான். அதை இன்னொருவன் பறிக்க முடியாது.

வாழ்க்கை என்பது வாழ்வது.

நிறைவாக வாழ்வதாக குறைவாக வாழ்வதா என்பது எல்லாம் பிரச்சினையே இல்லை. கேள்வியே கிடையாது. வாழ்வது. அவ்வளவுதான்.

நான் எனக்கே சொல்லிக்கொள்வது அதுதான். உன் வாழ்க்கையை நீ வாழவேண்டும். ஏனெனில் வாழ்க்கை என்பதின் சூட்சமத்தை நான் அறிவேன். அது எதிலும் பிடிபடாதது. பிடித்து அடக்க முடியாது என்பதை அறிந்து வைத்துக்கொண்டிருக்கிறேன். அதனாலேயே ஆனந்தமாக இருக்கிறேன்.

எனக்குப் பூரியும், கேசரியும் கொடுத்த அன்ன லட்சுமியை கையெடுத்து கும்பிட்டேன். அவள் எதிர் பார்க்கவில்லை. திகைத்துப்போனாள். அப்புறம் சமாளித்துக்கொண்டு சன்னமான குரலில் "சுவாமி நீங்கள் தமிழ்நாடா?" என்று தமிழில் கேட்டாள்.

"யாதும் ஊரே"

"நான் சென்னை சுவாமி. சௌக்கார்பேட்டை"

நான் அவளைக் குத்திட்டு ஒரு பார்வைப் பார்த்தேன்.

அவள் சந்தோஷமாக முறுவலித்தாள்.

கங்கை பேரிலச்சலோடு ஓடிகொண்டு இருந்தது. நான் எனக்குள்ளே பேசியபடி அன்னத்தைப் புசிக்க ஆரம்பித்தேன்.